உ

ஓம் நவக்கிரக பரப்ரஹ்மணே நம:

பிரமரகசிய

# சோதிட அரிச்சுவடி

நான்கு பாகங்கள் அடங்கியது

இஃது
தமிழ்ப்பண்டிதரும், நேட்டிவ் டாக்டரும்,
பஞ்சபக்ஷி கணித ஜோதிடருமாகிய
ஸ்ரீமான்: கொரக்கோட்டை
**ப. வடிவேலு செட்டியார் அவர்களால்**
எழுதியது.

S. பத்மநாப அய்யர் அவர்களின்
அனுமதியின்படி

சென்னை:
**ஆர். ஜீ. பதி கம்பெனியாரால்,**
வெளியிடப்பட்டது

—::—

காபிரைட்] [ரூபா. 1-25




உ

ஓம் நவக்கிரக பரப்ரஹ்மணே நம:

பிரமரகசிய

# சோதிட அரிச்சுவடி

## முதற்பாகம்

ஜெனனீ ஜென்ம செளக்யானாம்
வத்ஸனீ குல சம்ப்ரதாம்
பதவீ பூர்வ புண்யானாம்
லிகியதே ஜென்ம பத்திரிகா.

| | | | |
|---|---|---|---|
| 12 மீனம் பாதம் | 1 மேஷம் சிரசு | 2 ரிஷபம் முகம் | 3 மிதுனம் மார்பு |
| 11 கும்பம் கண்டை | ஓம் நக்ஷத்திர ராசி நவக்கிரக தத்துவசில மானிட சரீரம். | | 4 கடகம் இருதயம் |
| 10 மகரம் கால் | | | 5 சிங்கம் வயிறு |
| 9 தனுசு தொடை | 8 விருச்சிகம் லிங்கம் | 7 துலாம் காசி | 6 கன்னி கடிப்பிர |

## திறவுகோல் போதனாமுறை

சோதிட அரிச்சுவடி என்பது, மனோதத்துவ வியாபார சிஷ்யனுக்கு அறிவானந்த குருமூர்த்தி சுவாமிகள் தமது ஜோதியினிடமாக விளங்கும் திரிகாலஞான பிரம ரகசியத்தை பகிர்முகமாக அறியும் பொருட்டு; அதனால் நமக்குரிய அயன்விதிப்படி, உடலுயிருக்குரிய ஆயுள், நன்மை, தீமை, சுகதுக்கங்களைக் கணிதமூலமாக அறிந்து கொள்வதற்கு விளக்கிக் காட்டும் நூலாகும், அத்தகைய மகா மகத்துவ பரம ரகசிய நூலை, எளிதில யாவரும் தெரிந்துகொள்ளும் பொருட்டு ஆசிரியரின்றிச் சுலபமாக இந்நூலையே ஆசிரியராகக் கொண்டு உணர்ந்தவர்களே வல்ல சோதிடர்களாவதற்கும் வெளிவந்த நூலாகும். ஆனது பற்றியே, இதற்கு பிரம ரகசிய ஜோதிட ஹரிச்சுவடி என்று பெயர். (பிரம ரகசிய ஜோதிடத்தை அறியும்படியான புத்தகம்.)

ஜோதிடம் கணிக்க விரும்புவோர், ஆசார சீலர்களாகவும், பஞ்சமா பாதக தோஷ மற்றவர்களாகவும், பெரியோர் வணக்கமும், ஜீவகாருண்யமும், கடவுள் வழிபாடுடையவர்களாகவும் இருக்கவேண்டும். இன்றேல், கணிதம் பிசகும் சர்வ ஜாக்கிரதையுள்ளவனாயினும் அஜாக்ரதையால் பொய்க்கும்.

திரிகால ஞானமாகிய இந்த ஜோதிடத்தைக் கற்க விரும்புவோர், பிரதமத்தில் வருஷ மாத நக்ஷத்திர ராசி கிரகங்களின் பெயர்களை மனப்பாடமாகச் சாதனம் செய்துகொள்ள வேண்டும். அதன் பிறகு இராசி கிரகங்களின் தத்துவ சின்னங்களையும் தெரிந்து மனப் பழக்கமாக்கிக்கொள்ள வேண்டும். அப்பால் இராசி கிரக நட்பாட்சி உச்ச நீசம் பகை சமம்



தெரிந்துகொள்ள வேண்டும், அதோடு கிரகாதிகளின் சத்துரு மித்துரு சமத்துவமும், பஞ்சாங்க கணித கிரக சஞ்சாரமும் காலவரையும், அவர்களுக்கு உரிய காலபேத சுகமும், துவாதச பாவக பலாபலனும் திசாபுத்தி அந்தர சூக்ஷ்ம பலாபலனும், இதற்கு இன்றியமையாத கோச்சார பலாபலனும் தெரிந்துகொள்ள வேண்டும். இவை யனைத்தும் ஜனன் நிறைய உணர்ந்தே லக்கினம் கணிக்க வேண்டும். அவர்களுக்கே சொல்லும் பலாபலன் உண்மையாக இருக்கும். மற்றவர்களுக்குப் பொய்க்கும் என்பது உண்மையே யாம்.

ஒரு மனுஷன் எதினிடமாகவும் எதை முன்னிட்டும் பொய் பேசலாம்; ஜோதிடத்தினிடம் ஒரு போதும் பொய் பேசவே படாது ஏனெனில், மற்றவைகள் மற்றவைகளைச் சுட்டிக் காட்டும் இது அப்படியன்று. பிரதமத்திலேயே ஆயுளைத்தான் சுட்டிக்காட்டும்; அதுவே நமது பூலோக மானிட வாழ்க்கை அதினிடமாக உள்ளதை இல்லதென்றும், இல்லாததை உள்ளதென்றும், குறைந்த ஆயுளை அதிகமென்றும், அதிக ஆயுளை அற்பாயுளென்றும் சொல்லுவதாலும், அவர்கள் அதனைக் கேட்பதாலும், விளையும் விஷயாதிகளும் துக்கமும் விசேஷமேயாம்

ஒவ்வொரு ஜோதிடம் ஜாதகம் கணிக்கும்போது அதில் முதலில எழுதும் சுலோகமாவது, ,,ஜெனனீ'' என்று எழுதவேண்டிய விதியாகும். அதன் அர்த்தமாவது, நாம் எடுத்த பகுத்தறிவு உடைய மானிட ஜன்மமாவது பூர்வ ஜன்மத்திற் செய்த புண்ணியத்தினை லடையப்பெற்றதாகும் இதுவே சர்வ சித்திமனோ தத்துவத்திற்குச் சௌக்கியமானதாகும். குழந்தை ஜெனனமாவது அந்தக் குலத்தை விருத்தி செய்வதற்கு வந்ததாகும். அத்தகைய பூர்வ

புண்ணிய சௌக்கிய குலவிருத்தி செய்யவந்த மானிடனுக்கு நான் ஜென்மகால ஆயுள் சுகதுக்க முதலியவைகளைக் கவனிக்கின்றேன் என்பதாகும் அதன் அர்த்த பாகம் தெரிந்து, கால் அரை வித்தையால் ஏறுமாறாகக் கவனியாது கணிப்பது எத்தகையாலும் குற்றமாகும். அவ்வாறு தற்கால பேதத்தாலும் ஜீவிதத்தின் பொருட்டாகவும் நிகழுவது, அவர்கள் தெரிந்து சொல்லுவதல்ல. அவர்கள் ஐயந் திரிபற உணராத குற்றமேயாகும்.

ஜென்ம லக்கினத்தை நிர்தாரணஞ்செய்து திசா புத்தியை அறிந்து கிரக சஞ்சார தானபேதங் கண்டு, உச்சம், நீசம், பகை, சமத்துவமும் கேந்திர திரிகோண முதலிய ஆதிபத்தியாதிகளையுந் தெரிந்து, அதோடு கோசாரத்தையும் அனுசரித்து, துவாதச பாவக பலாபலன்களைத் தெரிந்தெடுக்கும்போது, முதலில் ஆயுள் பாகத்தையும், இரண்டாவது தாய் தந்தையையும், மூன்றாவது சகோதரர்களையும், நான்காவது சுகதுக்க திசாபுத்திகளையும் முறையே தெரிந்தெடுத் துரைத்தல் வேண்டும் பிறகே மற்ற அம்மான், பாட்டன், பாட்டி முதலியவைகளைப் பார்க்க வேண்டும். ஆயுள்பாவக மென்பது அரிட்டம், கண்டம், மரணம் மாரகதிசை என்பது விளக்குவதாம்.

மாரகதிசை வரும்போது ஜாதகனுக்கு அதிக லாபமும் ஐஸ்வரிய முதலான வெகு வைபோகங்களும் நடக்கும். இதற்கு ஸ்தானம் 3-க்கு விரையமாகிய 2-மிடமும் 8-க்கு விரையமாகிய 7-மிடமும் மாரக ஸ்தானமென்று பெயர், இதில் கெட்ட கிரகங்கள் வருமேயானால், அந்தக் கிரகத்தின் திசை அல்லது புத்தியில் மரணத்தைக் கொடுக்கும். ஆனால், வருபவர் இரண்டு வீட்டை யுடையவராயிருக்கில் மாரகத்தைத் துணிந்து செய்யாமல் அநேக கஷ்டங்களையும்



மாரகத்திற்குச் சமானமாகிய கஷ்டங்களையும் கொடுப்பார்கள் ஆனால் ஒரு வீட்டை யுடையவரா யிருக்கில் துணிந்து மாரகத்தைச் செய்வார்கள். மேற்சொல்லிய மாரகஸ்தானாதிபர்களைச் சுபர் பார்த்தால் அவ்வளவு வலிவு இராது. ஆனால் பாபர் பார்க்கில் அதிக வலிவாகும், ஆனால் இவர்கள் 1-[illegible]-7-8-12- ஆம் இடங்களில் நீச்சம் முதலிய துர் இடங்களி லிருந்தால் மாரகத்துக்குச் சமானமாகிய கண்டத்தைக் கொடுப்பார்கள் மேலும், 2-7 க்கு அதிபர்கள் உச்சம், கேந்திரம், திரிகோணமாகிலும் நல்ல சிநேகிதர்களுடன் சம்பந்தப்பட்டாலும் வலிவு இராது.

இதுவுமன்றி, 4-ம் திசை சனியானாலும், 6-ம் திசை குருவானாலும், 7-ம் திசை ராகுவானாலும், கண்டிப்பாய் மாரக மித்திசையில் 2—7—க்குடையவர் புத்தியில் வருமென்று கண்டிதமாய்ச் சொல்லலாம் மேலும் மேற் சொல்லிய திசைகளிடமாகவும் பாவிக்கலாம். ஆயுள் ஸ்தானமாகிய 3—8க்குடையவர்கள் கெட்ட ஆதீனமாகிய 2-3-7-8-12-லிருந்தால், கண்டிதமாய் மாரகத்தைச் செய்வார்கள் ஆனால் சுபர் சம்பந்தப்பட்டாலும், அல்லது பார்க்கப் பட்டாலும், மாரகமில்லாமல், கஷ்டபலன்களைக் கொடுப்பார்கள். மாரக ஸ்தானாதிபர் மாரக ஸ்தானமாகிய 2-7-ல் இருக்கப்பட்டவர்களுடன் சேர்ந்தாலும், நோக்கினாலும், மாரகத்தை கொடார். ஆனால் அவர்களுடன் சேர்ந்த பாபர் அல்லது அந்த ஸ்தானத்திலிருக்கின்ற பாபர் மாரகம் கண்டிதமாய்ச் செய்வார். குருவும், சுக்கிரனும், கேந்திராதிபத்தியத்தில் வெகு கொடியவர்கள் இவர்கள் 2-7-ம் இடங்களில் இருந்தால் மாரகத்தைத் தடையின்றிச் செய்வார்கள்.

லக்கினம் மேஷம், கடகம், துலாம், மகர சரராசியாயிருந்தால், 2-7 க்குடையோர்களும், ரிஷபம், சிங்கம், விருச்சிகம், கும்ப திராசியா யிருந்தால்

3-8-க்குடையவர்களும், மிதுனம், கன்னி, தனுசு, மீன வுபய ராசியா யிருந்தால், 7-11-க்குடையோர் மாரகாள்.

மேற்சொல்லியவைகளை அனுபோகத்தில்இராசிகளில் ஆராய்ந்து பார்த்து வெகு ஜாக்கிரதையாகச் சொலலவேண்டியது, இது மற்ற ஜோதிடர்கள் இராசியைப் பார்த்தும், வெகு விரைவில் இத்தனை வயதெனச் சொல்லுகிறார்கள். ஆனல் அப்படிச் சொல்வது வெகு பிசகு; ஏனென்றால், இது சரியா யிராமல் இருப்பதும் தவிர, கேட்டவர்களுக்கு அதிக திகிலைக் கொடுத்து, சிலருக்கு 4-வருடத்தில் மாரகம் என்று சொன்னல், விரைவிலே மரணமாவதும் அல்லது சிலருக்கு அதிக நாள் தள்ளுவதுமா யிருக்கும். இதில் ஜோதிடம் பொய்யென்று நம்புகிறார்கள். ஆகையால் ஜோதிடத்தால் மரணமென்று தெரிந்தாலும், பிறருக்கு ஒரு பலமாகிய கெண்டமென்று சொல்வது உத்தமம், இதுவுமன்றி இராசிக ளடங்கிய கிரகங்களைக் கொண்டு 8-ம் பாவகத்திய பலன்களி லிந்தக் கிரகங்களி னமைப்பு எதில் ஒட்டுகிறதோ அதுவும் வெகு கண்டிதமா யிருக்கும்.

இதோடு அரிஷ்ட தோஷங்களும், திசாபுத்தி மாரக பலனையும் அறிந்துசொல்ல வேண்டும். இம் மூன்று வித பலாபலனையும், தற்கால கோசார ரீதியையும் அறிந்து, ஆயுள் நிர்ணயப் படுத்த வேண்டும பிறந்தது முதல், 120-வயது வரை நிகழும் ஆயுள் பலாபலன்களை இந்நூலாசிரியர் இயற்றிய "பிரம ரகசிய சோதிட அரிச்சுவடி" ஒன்பது பாகங்கள் அடங்கிய புத்தகத்தில் விரிவாய்க் காணலாம், இனி ஜோதிட பயிற்சியை முறையே சொல்லுவோம்.



### யுகங்கள்—4

கிரேதாயுகம்
திரேதாயுகம்
துவாபரயுகம்
கலியுகம்

### சப்த வருஷங்கள்—7

| | |
|---|---|
| பாரதம் | ரம்மியம் |
| கிம்புருட | ஜாரன்விதம் |
| அரி | குரு |
| இளாவிதம் | |

### அரச அப்தங்கள்—8

| | |
|---|---|
| பாண்டவம் | கொல்லமாண்டு |
| சாலிவாகனம் சகாப்தம் | ராமதேவர் |
| விக்கிரமர்தி | பிரதாபருத்தி |
| போஜராஜா | கிருஷ்ணராயர் |

### வருஷங்கள்—60

| | | |
|---|---|---|
| பிரபவ | ஈஸ்வர | சர்வஜித்து |
| விபவ | வெகுதானிய | சர்வதாரி |
| சுக்கில | பிரமாதி | விரோதி |
| பிரமோதூத | விக்கிரம | விக்ருதி |
| பிரசோறபத்தி | விஷு | கர |
| ஆங்கீரஸ | சித்திரபானு | நந்தன |
| ஸ்ரீமுக | சுபானு | விஜய |
| பவ | தாரண | ஜய |
| யுவ | பார்த்திப | மன்மத |
| தாது | விய | துன்முகி |

| | | |
|---|---|---|
| ஹேவிளம்பி | பிலவங்க | பிங்கள |
| விளம்பி | கீலக | காளயுக்தி |
| விகாரி | சௌமிய | சித்தார்த்திரி |
| சார்வரி | சாதாரண | ரௌத்திரி |
| பிலவ | விரோதிகிருது | துன்மதி |
| சுபகிருது | பரிதாபி | துந்துபி |
| சோபகிருது | பிரமாதீஸ | ருத்ரோத்காரி |
| குரோதி | ஆனந்த | ரக்தாட்சி |
| விசுவாவசு | ராக்ஷச | குரோதன |
| பராபவ | நள | அக்ஷய |

## மாதங்கள்—12

| | | |
|---|---|---|
| சித்திரை | ஆவணி | மார்கழி |
| வைகாசி | புரட்டாசி | தை |
| ஆனி | ஐப்பசி | மாசி |
| ஆடி | கார்த்திகை | பங்குனி |

## மாதங்களுக்குரிய ராசிகள்—12

| | |
|---|---|
| சித்திரை—மேஷம் | ஐப்பசி—துலாம் |
| வைகாசி—ரிஷபம் | கார்த்திகை—விருச்சிகம் |
| ஆனி—மிதுனம் | மார்கழி—தனுசு |
| ஆடி—கடகம் | தை—மகரம் |
| ஆவணி—சிங்கம் | மாசி—கும்பம் |
| புரட்டாசி—கன்னி | பங்குனி—மீனம் |

## தமிழுக்குரிய ஆங்கில மாதங்கள்

| | | |
|---|---|---|
| ஏப்ரல் | ஆகஸ்ட்டு | டிசம்பர் |
| மே | செப்டம்பர் | ஜனவரி |
| ஜூன் | அக்டோபர் | பிப்ரவரி |
| ஜூலை | நவம்பர் | மார்ச்சு |



## அயனம்—2

தைமாதம் முதல் 6—மாதம் வரை—தக்ஷணாயனம்
ஆடிமாதம் முதல் 6—மாதம் வரை—உத்தராயனம்

## ருதுக்கள்—6

வசந்தருது—சித்திரை, வைகாசி
வருஷருது—ஆவணி, புரட்டாசி
ஏமந்தருது—மார்கழி, தை
கிருஷ்மருது—ஆனி, ஆடி
சரருது—ஐப்பசி, கார்த்திகை
சசிருது—மாசி, பங்குனி

## திதிகள்—25

| | | |
|---|---|---|
| பிரதமை | சப்தமி | திரியோதசி |
| துதிமை | அஷ்டமி | சதுர்த்தசி |
| திரிதிமை | நவமி | பௌர்ணமி அல்லது |
| சதுர்த்தி | தசமி | அமாவாசை |
| பஞ்சமி | ஏகாதசி | |
| சஷ்டி. | துவாதசி | |

## நக்ஷத்திரங்கள்—27

| | | |
|---|---|---|
| அசுவினி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| கிருத்திகை | உத்திரம் | உத்திராடம் |
| ரோகணி | அஸ்தம் | திருவோணம் |
| மிகசீரிடம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | சுவாதி | சதயம் |
| புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி |
| ஆயிலியம் | கேட்டை | ரேவதி |

## நக்ஷத்திர அதிதேவதை

| | | |
|---|---|---|
| சரஸ்வதி | சுக்கிரன் | அசுரர் |
| துர்க்கை | பார்வதி | வருணன் |
| அக்கினி | சூரியன் | கணபதி |
| பிரமன் | சத்தா | விஷ்ணு |
| சந்திரன் | விஸ்வகர்மா | வசுக்கள் |
| பரமசிவன் | வாயு | இயமன் |
| அதிதி | குமரன் | குபேரன் |
| குரு | இலக்குமி | காமதேனு |
| ஆதிசேஷன் | இந்திரன் | சனி |

## வாரங்கள்—7

ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி,

## பக்ஷங்கள்—2

சுக்கிலபக்ஷம்—வளர் பிறை
கிருஷ்ணபக்ஷம்—தேய்பிறை

## யோகங்கள்—27

| | | |
|---|---|---|
| விஷ்கம்பம் | கண்டம் | பரிகம் |
| பிரீதி | விருத்தி | சிவம் |
| ஆயுஷ்மான் | துருவம் | சித்தம் |
| சௌபாக்கியம் | வியாகதம் | சாத்தியம் |
| சோபனம் | அரிஷணம் | சுபம் |
| அதிகண்டம் | வச்சிரம் | சுப்பிரம் |
| சுகர்மம் | சித்தி | பிராமியம் |
| திருதி | விதிபாதம் | மாகேந்திரம் |
| சூலம் | பரிமான் | வைதிருதி |



## கரணங்கள்—11

| | | |
|---|---|---|
| பலம் | கரசை | சதுஷ்பாதம் |
| பாலவம் | வணிசை | நாகவம் |
| கௌலவம் | பத்திரவம் | கிமிஸ்துக்கினம் |
| தைதுலை | சகுனி | |

## வேளைகள்—3

சாத்வீகம்—இராஜசம்—தாமசம்.

## கிரகங்கள்—9

| | | |
|---|---|---|
| சூரியன் | புதன் | சனி |
| சந்திரன் | குரு | ராகு |
| செவ்வாய் | சுக்கிரன் | கேது |

## கிரகங்களின் புத்திரர்—9

| | |
|---|---|
| காலன் | இந்திரதனுசு |
| அஸ்தப்பிரகன் | குளிகன் |
| எமகண்டன் | பரிவேடன் |
| தன்மதன் | விதிபாதன் |
| தூமகேது | |

## அயனங்களின் பலாபலன்

உத்திராயனம்:—ஐயமுடையோன், பரிசுத்த முடையான், ஞான சாஸதிரப் பயிற்சி யுள்ளவன் போர் புரிவதில் பிரீதி யுடையவன்.

தக்ஷணாயனம்:—வேதஞானம் பயிற்சி யுடையோன், ஞானி, நல்லொழுக்க முடையவன்.

## ருதுக்களின் பலாபலன்

வசந்தருது:—பால்பிரியன், தன்னை அலங்கரித்துக் கொள்வதில் மிக்க பிரீதியுடையவன், செல்வந்தன், நீண்ட ஆயுளுடையவன், தின்பன உண்பனவையில் அளவுக் கதிகமாகப் புசிப்பவன்.

கிருஷ்மருது:—உத்தமன், நற்குணன், நல்லொழுக்க முள்ளவன், ஜலப்பிரியன், நரம்பன், சமர்த்தன்.

வருஷருது:—நல்லவர்கள் நேசன், நாகரிகமாயிருப்பவன், உவர்ப்பானவைகளைப் புசிப்பதில பிரீதியுடையன்.

சரருது:—வருமான காம்பீரன், ரம்மியமாக இருக்கும் மூலையையுடைய ஸ்திரீயை விரும்புபவன் நல்ல அந்தஸ்து உடையவன்.

ஏமந்தருது:—பரோபகாரி, அழகமைந்த பெண்களை விரும்புபவன், நுட்பமான திரேகத்தை யுடையவன், செல்வந்தன்.

சசிருது:—புண்ணியஞ் செய்பவன், நல்லொழுக்கமுடையவன், தைரியசாலி, ஜலப்பிரியன், கீர்த்தியுடையவன்.

### திதிகளின் பலாபலன்

பிரதமை:—சந்தோஷப் பிரியன், எதையும் யோசிக்கும் புத்தியுடையவன், செலவன்

துதியை:—கீர்த்தி யுடையவன், சத்திய வாசகன், பொய் சொல்லாதவன, பொருள் சேர்ப்பவன், இனத்தாரை ரக்ஷிப்பவன்.

திரிதியை:—எண்ணியதை முடிப்பவன், தனவான், பயமுள்ளவன், பராக்கிரம முடையவன், சுத்த முடையோன், திருக்கோயில் கைங்கரியம் செய்பவன்.

சதுர்த்தி:—அளவற்ற காரியம் சித்திப்பவன், தேச சஞ்சாரம் செய்பவன், எல்லோருக்கும் நண்பன், மந்திரவாதி.

பஞ்சமி:—வேத ஆராய்ச்சி யுடையோன், ஸ்திரீ பிரியன், காமி, துக்கம் நுட்பதேகி



சஷ்டி:—பிரபுக்களால் விரும்பத் தக்கவன், செல்வன், மெலிந்தவன், முன்கோபி.

சப்தமி:—செல்வன், தயாள சிந்தையுடையவன், க்ஷயரோகி, பராக்கிரமசாலி, எதிலும் கண்டித முடையவன்.

அஷ்டமி:—புத்திர செல்வ முடையோன், காமுகன், பிறவிச் செல்வமுடையோன், க்ஷயரோகி, இலக்ஷிமிவாச முடையவன,

நவமி:—கீர்த்தியுடையவன், மனைவி மக்களை விரும்பாதவன், ஸ்தூலதேகி, பரஸ்திரீ கமனம் செய்பவன.

தசமி:—சில முள்ளவன், தர்மவான், யோக்கியன்.

ஏகாதசி:—செல்வன். நீதியுடனிருப்பவன், அழகற்றவன், உத்தமமானதைச் செய்பவன.

துவாதசி:—செல்வன், தர்மவான், நூதனத் தொழில் செய்பவன், சில முள்ளவன்.

திரியோதசி:—உறவின ரில்லாதவன, லோபி, செலவன, மாந்திரிகன, கீர்த்திசாலி.

சதுர்த்தசி:—குரோத முடையோன், பிறர் பொருளபகரிப்பதில பிரியன், கோபி, பிறர் தூஷணிப்பான.

பௌர்ணமி:—புத்தி, வித்தை, பொறுமை, பெருமை, சத்தியவாசகன், தயாள சிந்தையுடையோன், களங்க முடையவன், உக்கிரமுள்ள தேவதையைப் பூசிப்பவன், கீர்த்தியுடையோன, நன்மை.

### நக்ஷத்திர பலாபலன்

அசுவினி:—முன்னரைக்கு, ஜனனமானவன் புத்திமான், செல்வந்தன், இலக்ஷிமி கடாக்ஷ முடையோன், கீர்த்தியுடையோன், நன்மை.

அசுவினி:—பின்னரையில் பிறந்தவன், ஞான சாஸ்திர பசிற்சியுள்ளவன், டாம்பீகன், சோதிடநூல் வல்லோன், சண்டைக்காரன்.

பரணி:—முன்னரைக்கு, காத்திரமான தேக முள்ளவன், காமுகன, நற்குணன், ஆங்காரி, நன்றி மறந்தவுன், மத்திபம்

பரணி:—பின்னரைக்கு, சத்துருக்களை ஜெயிப் பவன், கோபி, சகல திறமை யுள்ளோன்.

கார்த்திகை:—முன்னரைக்கு, கல்வி யில்லாத வன், பொய் பேசுபவவன், கோபி, வாயாடி, இரசவா தன், செல்வந்தன், கெட்டது.

கார்த்திகை:—பின்னரைக்கு கல்வி யற்றவன், மூர்க்க முடையவன், வித்துவான், கெட்ட நடை யுடையோன்,

ரோகணி:—முன்னரைக்கு, பரஸ்திரீ பிரியன், தத்துவஞானி, செல்வர்கள் நேச முடையோன், வாக் குப் பிசகாதவன் மத்திபம்.

ரோகணி:—பின்னரைக்கு, அபிமான முடைய வன், ஸ்திரீ பிரியன், கோபி, மாந்திரீக சாஸ்திர வல்லவன்.

மிருகசீரிடம்:—முன்னரைக்கு, கட்டி, சிரங் குள்ளதேகி, புத்திசாலி, ஒழுங்குடையோன். தேச சஞ்சாரி, மத்திபம்.

மிருகசீரிடம்:—பின்னரைக்கு, புத்திரசாலி, கோபி, சகல திறமையுள்ளவன், சத்தியம் தவறாத வன்.

திருவாதிரை:—முன்னரைக்கு, புண்ணியவான், சிநேகிதப்பிரியன், பராக்கிரமசாலி, பொருள் சேர்ப் போன், கோபி, மத்திபம்.



திருவாதிரை பின்னரைக்கு, கோபி, பந்து பகை, கர்வி, நற்குண முடையவன.

புனர்பூசம்:—முன்னரைக்கு, ஆசை, செல்வம், பித்ததேகி, பிரபல்ய வித்வான், காமி மனோதிட மற் றவன், மத்திபம்.

புனர்பூசம் பின்னரைக்கு, டம்பன், அனுசாரம் திறமை யுளளவன், பெருத்த விபாதி.

பூசம்:—முன்னரைக்கு, செல்வந்தர் நட்பு, தெய்வபக்தி யுடையவன், செல்வந்தன், மாயவித் தைக்காரன், தர்மகுணம, தாய்தந்தை பிரியன், மத்திபம்.

பூசம் பின்னரைக்கு, காமி, பிரபு, சண்டைக் காரன, புத்திசாலி.

ஆயிலியம்:—முன்னரைக்கு, ஆழியன், கோபி, நெஞ்சாங்காரி, பலவற்றைப் புசிப்போன், விவேகி, தனமார்க்கன். கெட்டது.

ஆயிலியம் பின்னரைக்கு, துஷ்டன், கோபி, பெருமையான கண்கள், நியாயப் பிரியன்,

மகம்:—முன்னரைக்கு, அபிமானி, சாஸ்திர முணர்ந்த பண்டிதன், தர்மி, அழகி, தனவான், நனமை.

மகம் பின்னரைக்கு, செலவாளி, விவேகி, பரி சுத்தன், ரோகி.

பூரம்:—முன்னரைக்கு, துர்நடத்தை, வாயாடி ஸ்திரீ பிரியன, புத்திசாலி, கெட்டது.

பூரம் பின்னரைக்கு, கவலை, துஷ்டன், மேன்மை, வர்த்தகன்.

உத்திரம்:— முன்னரைக்கு, ஒழுங்கான நடத்தை, யோகவான, நனறி மறவாதவன், அபி மானி, நற்குணமுடையோன், நன்மை.

உத்திரம் பின்னரைக்கு, யாசிப்பவன், டம்பன், அலக்ஷியம், தைரியசாலி,

அஸ்தம்:—முன்னரைக்கு, பொன்னுபரணம், நல்லவார்த்தை, செல்வந்தன், நற்காரியம, பண்டிதம், மத்திபம்.

அஸ்தம் பின்னரைக்கு, வாயாடி, ஆங்காரி, சந்தஷ்டி, தந்தையைச் சிறுவயதி விழப்பவன்.

சித்திரை:—முன்னரைக்கு, துரிதமாக நடப்பவன், வயிற்றிலும் முகத்திலும் மச்சம், நற்காரியம், மர்மி, நன்மை

சித்திரை பின்னரைக்கு, வித்துவான், தேசசஞ்சாரி, சத்துரு நேசன், தரிததிரன்.

சுவாதி:—முன்னரைக்கு, செல்வந்தன், தெய்வபக்திபுடையோன், பலவான், பொய் பேசாதவன், நன்மை

சுவாதி பின்னரைக்கு, யோசிப்பவன், யோகம், முன்கோபி, நேத்திர ரோகி.

விசாகம்:—முன்னரைக்கு, வஞ்சகன், பாட்டு, புத்திசாலி, பரிசாரகம், நடினப் பிரியன், மத்திபம்.

விசாகம் பின்னரைக்கு, தற்புகழ்ச்சி யுடையோன், விசேஷ புத்திசாலி, சாஸ்திர மறிந்தோன், தந்திரவாதி

அனுஷம்:—முன்னரைக்கு, பந்துக்களை இரட்சிப்பவன், வாக்கு பிசகாதவன், மத்திபம்.

அனுஷம் பின்னரைக்கு, வாத்தியப் பிரியன், வாக்கு சுத்த மற்றவன், விசேஷ புத்திமான், பெருந்தன்மை யுள்ளவன்.

கேட்டை:—முன்னரைக்கு, பரஸ்திரி கமனம் செய்பவன், தர்மவான், தைரியசாலி, செல்வந்தன், மத்திபம்.



கேட்டை பின்னரைக்கு, யோசனை யுடையவன் பரிகசிப்பவன், தயாள சிந்தையுடையோன், முன்கோபி.

மூலம்:—முன்னரைக்கு வாயாடி, பாவி, நன்றியற்றவன், சுறுசுறுப்புள்ளவன், செல்வந்தன், கெட்டது.

மூலம் பின்னரைக்கு, மாந்திரிக சாஸ்திரன், விவேகி, ரோகி, கியானி.

பூராடம்:—முன்னரைக்கு, நீண்டகை, பிறர் உபகாரம் சுகம், புத்திசாலி, வணக்கம், கெட்டது.

பூராடம் பின்னரைக்கு, தாயைச் சிறுவயதி விழப்பவன், திருடன், தவசி, மரியாதை யுள்ளவன்.

உத்திராடம்:—முன்னரைக்கு, பொறுமை, சுகவான், கீர்த்தி, புண்ணியவான், தனவான், கல்விப் பிரியன், நன்மை.

உத்திராடம் பின்னரைக்கு, சாத்திர ஆராய்ச்சி யுடையோன், மனக் கிலேசி, பிரசங்கி, நூதன காரியம் செய்பவன்.

திருவோணம்:—முன்னரைக்கு, தர்மம் தெய்வ பக்தி, பொருள, குருபத்தி, சுற்றத்தார் நேசம். நன்மை.

திருவோணம் பின்னரைக்கு, காமி, செல்வந்தன், தாமிஷ்டி, புத்திசாலி.

அவிட்டம்:—முன்னரைக்கு தனவந்தன், சுகம், பூமி ஆசை, தொடை பெருத்தவன், மததிபம்.

அவிட்டம் பின்னரைக்கு, தரித்திரன், சஞ்சலம், ஆங்காரி, பாரிய குணம்.

சதயம்:—முன்னரைக்கு பொறுமை, புத்திசாலி, அற்பம் புசிப்பன், நன்னடத்தை, மத்திபம்.

சதயம்:—பின்னரைக்கு, நற்குணன், கொண்டதை முடிப்பவன், கோபி, நன்னெறி.

பூரட்டாதி:—முன்னரைக்கு, கபடன், திருடன், பயமானவனைப்போல நடிப்பவன், கெட்டது.

பூரட்டாதி பின்னரைக்கு, மனைவிப் பிரியன், வைத்தியம், மாந்திரீகன், பிரபு நேசன்.

உத்திரட்டாதி:—முன்னரைக்கு, பாண்டியன், சீலன், அதிக செல்வ முடையோன், அன்போடு பேசுபவன், மத்திபம்.

உத்திரட்டாதி பின்னரைக்கு, நற்குணம், விசா லம், துர்விஷயப் பிரியன், முன் கோபி.

ரேவதி:—முன்னரைக்கு, சுந்தரன், நிலையான புத்தி. மனைவி நேசன். தேகத்தில் மருவு, மத்திபம்.

ரேவதி, பின்னரைக்கு திருடன், கலகன், எளிமை, தற்புகழ்ச்சி.

### வாரங்களின் பலாபலன்

ஞாயிறு:—அழகு, சிவப்பு, நேத்திரம், அலட்சி யம் செய்பவன், தனவந்தன், மத்திபம்.

திங்கள்:—அபிமானி, கீர்த்தி, தர்மம், நன்மை.

செவ்வாய்:—வஞ்சகன். பொய்யன், பேமானி, ஈனன், கெட்டது.

புதன்:—கல்வி யுடையோன், தெய்வ பக்தி, சத்தியம், நன்மை.

வியாழன்:—சத்தியன், புத்திசாலி, மகிழ்ச்சி யுள்ள பிரபு, தர்மன், நன்மை.

வெள்ளி:—செல்வன், உயர்ந்த காரியம் செய்பவ வன், நன்மை.

சனி:—பாவி, பரஸ்திரீ பிரியன், பலவீனன், கெட்டது.

### யோகங்களின் பலாபலன்

விஷ்கம்பம்:—தனவான், சத்துரு சங்காரி, பந்துஜனப் பிரியன், மாடு முதலியவை வைப்பவன்.



பிரீதி:நற்குணன், தைரியச்சாலி, சகல தொழி லும் செய்பவன்.

ஆயுஷ்மான்:—சீலம் உள்ளவன், தீர்க்காயுள் உள்ளவன், பராக்கிரமசாலி, சுகவான்.

சௌபாக்கியம்:—தேவ பக்தி, மானி, பெருமை, சுகவான்.

சோபனம்:—ஆலய தரிசனம்; நற்குணன், சாமர்த்தியன்.

அதிகண்டம்:—பந்து மித்திரர் பூஜிகள், செல் வந்திரட்டுவோன், கீர்த்தி பொருந்தியவன்.

சுகர்மம்:—புத்திசாலி, புண்ணியசாலி, உத்தமி பிரியன்.

திருதி:—பேராசை, பொறுமை, நல்வார்த்தை.

சூலம்:—கோபி, கலகன், தாழ்ந்த குலத் தோன், கருணை யுடையோன், சத்துரு சங்காரி.

கண்டம்:—லட்சுமிகர மற்றவன், ஆங்காரி, பயங்காளி.

விருத்தி:—சரித்திர பிரசங்கி, செல்வன், செல வர்கள், நண்பன்.

துருவம்:—தனவந்தன், இதம் பேசுவோன், பெரியோரிடம் பக்தி யுடையவன்.

வியாகதம்:—மடையன்; விரோதி. துக்கன், தேசசஞ்சாரி.

அரிஷணம்:—தனவான், புத்திமான், நல்ல காரி யங்களைச் செய்பவன், இனிப்புப் பண்டப்பிரியன்.

வச்சிரம்:—பூமி யுடையவன், காமி, தனவான்.

சித்தி:—பிரஜாபிமானி, செல்வந்தன், தெய்வ பக்தி யுடையோன், விசுவாச முடையோன்.

விதபாதம்:—தீங்கு செய்பவன், வஞ்சகன், கெட்ட நடத்தை யுடையோன்.

வரியான்:—கொலைப் பிரியன், பொய்யன், மகா துஷ்டன்.

பரிகம்:—ஈனன், மோசஞ் செய்பவன், தீய குணன், கபடன்.

சிவம்:—மாதா பிதாவைப் பேணுபவன், நல்ல சரித்திரம் படித்து நடப்பவன்.

சித்தம்:—பிரபு நேசன், அழகு அற்றவன், நல்ல நடக்கை போதிப்பவன்.

சாத்தியம்:—வித்துவான், உத்தம ஸ்திரீயை மணப்பவன், சாஸ்திர மறிந்தவன்.

சுபம்:—ஸ்திரீ லோலன், பொருள் சேர்ப்பவன், அழகன்,

சுப்பிரம்:—தர்மன், கடுங்கோபி, வித்துவான், மிருதுவானதேகி, செல்வந்தன்.

பிரமம்:—தான் புசிக்கச் சம்பாதிக்காதவன், தர்மன், தயாள சிந்தை யுடையோன்.

மகேந்திரம்:—தயாள சிந்தை யுடையோன், செல்வந்தன், சகலமு மறிந்தவன்.

வைதிருதி:—தர்மன், டாம்பீகன், அயலாரை அவதூறு கூறுபவன் பலவான்.

கரணங்களின் பலாபலன்

பவம்:—பாவி, காமிஷ்டி, சோம்பி, கெட்டது

பாலவம்:—நற்குணன், கண்ணியன், சங்கீதப் பயிற்சி யுள்ளவன். மத்திமம்.

கௌலவம்:—கீர்த்திமான், நன்னடக்கை யுள்ளோன், செல்வந்தன், நன்மை,

தைதுலை:—சந்தோஷி, செல்வந்தன், நன்னடக்கை யுள்ளோன், தர்மவான், நன்மை.



கரசை :—இரட்சகன், மாதா பிதா நேசி, கீர்த்திமான், தெய்வபக்தி.

வணிசை :—ஸ்திரீ பிரியன், டம்பன், நற்குணவான், வெகு சாமர்த்தியன், மத்திமம்.

பத்திரம் :—ஸ்திரீ கவலை, சிறப்புள்ளோன், மத்திமம்.

சகுனி :—மடையன், முன் கோபி, பாவி கெட்டது.

சதுஷ்பாதம் :—சர்வ விஷய சமர்த்தன், செல்வன், மத்திமம்.

நாகவம் :—செல்வன், பராக்கிரமசாலி, சமர்த்தன், நன்மை.

கிமிஸ்துக்கினம் :—தந்திரவாதி, பலர் பிரியன், சஞ்சலம், மத்திமம்.

வேலைகளின் பலாபலன்

சாத்விகம் :—விதரணம், அழகு, புத்திமான், தெய்வபக்தி யுடையோன், நன்மை.

இராஜசம் :—தேசோபகாரம், மேம்பாடாய் நடப்பவன், கல்வி, நற்புத்தி, சுகமுடையோன் நன்மை.

தாமஸம் :—சோம்பி, வாக்கு சுத்த மற்றவன், கல்விமற்றவன், அசதி யுடையவன, பாவி, கெட்டது.

மாதங்களின் பலாபலன்

சித்திரை :—சந்தோஷி-மாதா பிதா பிரியன்-வேத சாஸ்திரி, நன்மை

வைகாசி :—தைரியசாலி - வித்வான் - கீர்த்தி யுடையோன் நன்மை.

ஆனி:—தீரன், அற்ப கோபி - புத்திர சம்பத்துடையவன், மத்திபம்.

ஆடி:— செல்வந்தன் - தயாளன் - நன்மனைவி-புண்ணியவான், மத்திபம்.

ஆவணி:— விசுவாசி - தெய்வபக்தி - செல்வந்தர் நேசன், நன்மை.

புரட்டாசி:— சரித்திர மறிந்தோன் - தேசசஞ்சாரி - சாந்தன், நன்மை.

ஐப்பசி:—கெட்ட சிந்தனை யுடையோன் சிவப்பு நிறம் - தரித்திரன், கெட்டது:

கார்த்திகை :—செல்வந்தன் - சேர்ப்பவன்- பெற்றோருடன் கூடிவாழ்பவன் - நன்மை.

மார்கழி:—பெற்றோர் பிரியன் - செல்வம் சேர்ப்பவன் - தெய்வபக்தி - நன்மை

தை:—செல்வந்தன் - நரம்பன் - நீட்டுமூக்கன் - நற்குணன் மத்திபம்.

மாசி:—புத்தி யில்லாதவன் - வீண் பேச்சு - விரோதி - கர்மி - கெட்டது.

பங்குனி:—செல்வந்தன் - தர்மி - கியாணி - மத்திபம்.

### கவனிப்பு

மேற்சொல்லிய பலன்களெல்லாம் யதாமொரு காரியம் ஆவக்குப்போது நல்லவை கெட்டவை என்று அறிந்து கொண்டு நடப்பதுந் தவிர குழந்தைகள் ஜனனமாகும்போது அவைகளின் நிலைமை பிரகாரம் அவாளவாள் அமைப்பும் அறியலாம்.



## இலக்கினப் பலாபலன்கள்

### மேஷ லக்கின பலன்

மேஷத்தில் உதித்தவன் அரசர் புகழ்தல், திடமான புத்தி, நகைபொருள் விருத்தி, ஆளடிமை பெறல், அதிக அழகு, இளைத்த சரீரம், தனம், சாமர்த்யம், தர்மம், சாஸ்திரம் கேட்டல், நீண்ட கழுத்து, சொல்வன்மை, முன்கோபி, சிறுமுழங்கால், மிருகவைரி, 5-ல் அக்கினி பயம், 7-ல் சுரம், 20-ல் புலவன், வாக்கில் வியாதி, 22-ல் சர்ப்ப பயம், 25-ல் ஜலகண்டம், 28-ல பிளவை, இந்த லக்கினத்தைச் சுபர் பார்த்தால் 100-வயது, மார்கழி மாதம் பூரணை வியாழம் ரோகணி கூடிய இரவு 10-நாழிகையில் தலை நோயால நிரயாணம்.

### ரிஷப லக்கினப் பலன்

ரிஷப லக்கினத்தில் ஜனித்தவன் தெய்வ பக்தி வாக்கு நிலைமை, அற்ப போஜனர், பருத்த தேகம், ஆளடிமை பெறல, புளிப்புப் பிரியன். வேண்டிய மட்டும் கணித சாஸ்திரம் படித்தல், வஸ்திராபரணம் அணிதல், மிருதுவான காது, பிறர்பொருளைக் கபடற்றவன்போல், நடித்து அபகரித்தல், அதிக இருமல், மக்களின் மழலைச்சொலலை ஆசையுடன் கேட்பவன், 5-ல் சுரபயம, 16-ல் வியாதி கண்டம், 19-ல் காயம், 20-27-ல் காய்ச்சல் இந்தலக்கினத்தைச் சுபர் பார்க்கில் வயது 77, வருஷம் ஆவணி மாதம் பூர்வபக்ஷம் திரயோதசி, உத்திராடம் திங்கள் மாலை சுரத்தால் நிரயாணம்.

### மிதுன லக்கினப் பலன்

மிதுன லக்கினத்தில் ஜனித்தவன் கீர்த்தி, வெட்கம், கபடன், ஆசார நேமம், வாக்கு சுத்த மில்லாதவன், நோன்பு குளிர்ந்த வசனம், தன் சுபகாரியத்தையே பார்ப்பவன், பித்தரோகன், கருமை அல்லது

பச்சைநிறம், 3 ல் அநேககண்டம், 5 ல் அக்கினி பயம், 8 ல் ஆயுத கண்டம், 10 ல் பகைவாளி சங்கடம், 18 ல் அண்டவாதம், 20 ல் நேத்திரநோய், இந்த லக்கினத்தைச் சுபர் பார்க்கில் 65-வயது ஆவணிமாதம் வளர்பிறை சதுர்த்தி, வெற்றி திருவோணம் கூடிய இரவு 14-நாழிகைக்கு மாரடைப்பால் நிரயாணம்.

### கடகலக்கினப் பலன்

கடக லக்கினத்தில் ஜனித்தவன், சிவப்புள்ளவன், சமர்த்தன், பராக்கிரமமாய் நடப்பவன், வேசையர் மேலாசை வைப்பவன், செல்வந்தன், குருவிசுவாசன், தந்தைப் பிரியன், கீர்த்தி, இரகசியமான இடத்தில் மருவு, சிலகாலம் தரித்திரம், 5-16-20-25-ல் அகாலசாவு, கண்டம். இந்த லக்கினத்தை சுபர் பார்த்கால் 90-வயது மாசிமாதம் பூர்வ பக்ஷம் பஞ்சமி புதன் மிருகசீரிடம் அந்தியில் நிரயாணம்.

### சிங்க லக்கினப் பலன்

சிங்க லக்கினத்தில் ஜனித்தவன் நன்றாய்ப் புசிப்பவன், சிவார்ச்சனை செய்தல், அதிக பசியுடையவன், தர்மசிந்தனை, எந்நாளும் பிரியன், புத்திசாலி, வியாதி வந்தால் உடனே நிவர்த்தி, வேலையின்மேல் அதிக விருப்பமுடையவன், 5-10-27 ல் சுரமாயிருந்து 30-நாளில் நிவர்த்தி. சுபர் பார்க்கில் 80-வயது பங்குனி மாதம், அமரபக்ஷம், பாட்டிமை அஸ்தம், சனிவாரம் பகல் நிரயாணம.

### கன்னியா லக்கினப் பலன்

கன்னியா லக்கினத்தில் ஜனித்தவன் தர்மம் செய்பவன். தரித்திரம், வெகு ஆசாரமுள்ளவன், பின் வயதில் பலகர்மமறிந்திடுவான், அதிக தனத்தை தேடுபவன், 5-ல் தீபயம், 10-ல் சுரபீடிதம், 18-ல் வைசூரியம் சுபர் பார்க்கில் 71-வது வயது வைகாசி மாதம் அமரபக்ஷம், சதுர்த்தசி சித்திரை குன்ம நோயில் நிரயாணம்.



### துலா லக்கினப் பலன்

துலா லக்கினத்தில் ஜனித்தவன் இரண்டு மனைவிகள், குழந்தைக் கூட்டமுள்ள குலம், அபிமானி, பெரியோர்கள் நேசம், நல்ல சுகம், வாசனைப் பூக்களை மணிதல், நத்திய உறவினர்கள், தர்மகுணம 7 - ல் அக்கினிபயம், 12 - ல் வைசூரி, 19 - ல் சத்துருபகை 28-ல ஆயுதபயம், 4[illegible]-ல் ஜலகண்டம், சுபர் பார்க்கில் 85-வயது கார்த்திகை மாதம், அமரபக்ஷம் சஷ்டி ஆதிவாரம் விருத்தியோகம் காலையில் நிரயாணம்.

### விருச்சிக லக்கினப் பலன்

விருச்சிக லக்கினத்தில் ஜனித்தவன் பெற்றோர் பிரியன், மனைவி பிரியன், நல்ல வார்த்தை பேசுபவன். கிரமமாய் நினைத்த காரியத்தை முடிப்பவன், 4 - ல் அக்கினி பயம் 5 - ல் சுரம், 12-18 - ல் அக்கினி கண்டம, 40-ல் சன்னிவாத சுரம், சுபர்பார்க்கில் 99 - வயது ஆனிமாதம் வளர்பிறை துவாதசி சனிவாரம், விசாகம் சாமரக்ஷை நிரயாணம்.

### தனுசு லக்கின பலாபலன்

தனுசு லக்கினத்தில் ஜனித்தவன், இரசிய இடத்தில் மச்சம் நேத்திரம் நீண்டு உருளையாக இருக்கும். வாசனை மலர்கள்மேல் பிரியன், மிகுந்த புத்திரர், மரணம நேர்த்தியான தேகம், சிவப்புநிறம், பெண்சாதி பிரியன். பட்சிகளைக்கொள்ளல், 10 - ல் சுரம, 32-ல்யாத்திரை, 47-ல் பாம்பு பயம், சுபர் பார்கில் 67-வயது அமரபட்சம், பஞ்சமி உத்திரட்டாதி காலை நிரயாணம.

### மகர லக்கின பலாபலன்

மகர லக்கினத்தில் ஜனித்தவன், இரசிய இடத்தில் மச்சம், நேத்திரம் நீண்டு உருளையாக இருக்கும் வாசனை மலர்கள்மேல், பிரியன், மிகுந்த புத்திரர்.

மரணம் நேர்த்தியான தேகம், சிவப்புநிறம், பெண் சாதி பிரியன், பட்சிகளைக் கொள்ளல் 10-ல் சுரம், 32-ல் யாத்திரை, 47-ல் பாம்பு பயம், சுபர் பார்க்கில் 67-வயது அமரபட்சம், பஞ்சமி உத்திரட்டாதி காலை நிரயாணம்.

## கும்ப லக்கின பலாபலன்

கும்ப லக்கினத்தினில் ஜனித்தவன் தன்னைத் தானே புகழ்ந்து கொள்பவன், மற்றவர்களை இகழ்ந்து பேசுபவன், குள்ளம், கொஞ்சம் கல்வி, பித்தசரீரம், ஒருவர் செய்த நன்றியை மறந்துவிடுபவன், சிவப்புக் கண், சவுக்கியம், ஸ்திரீகளுக்கு நண்பன், 11-ல் சுரம், 19-ல் அதிக சன்னி வாதசுரம், சுபர் பார்க்கில், 80-வயது சித்திரை மாதம், பஞ்சமி, திருவாதிரை வியாழக் கிழமை, மாலையில் நிரயாணம்.

## மீன லக்கின பலாபலன்

மீன லக்கினத்தில் ஜனித்தவன், தனவான், சூரன், பொறுமைவான். ஞானம், அகோரமுள்ள 2-மனைவி, வாசனை புஷ்பமிஷ்டன், குளிர்மையான கண்கள், தலை, கர்ணரோகம், அன்னிய பொருள் அபகரித்தல், வெகு ஜாக்கிரதை யுள்ளவன், கண்ட தெல்லாம் தின்னுமூர்க்கன் 12-20-ல் சுரம், 28-ல இருமல, சுபர்பார்க்கில், 100-வயதில் நிரயாணம்.

## முக்கிய கவனிப்பு

சாதாரணமாய்க் கிரகங்கள் எப்போதும் மாறிக் கொண்டு வருவதாலும் சம்பந்தப் பட்டவர்களும பார்க்கப் பட்டவர்களும் வித்தியாசமாய் வருவதாலும் மேற்சொல்லிய இராசிகளின் பலன்களைக் கண்டிதமாய்க் கொள்ளாமல் தோராயமாய்க் கொள்ளலாம்.

முதற்பாகம் முற்றிற்று.

---

உ

ஓம் நவக்கிரக பரப்ரஹ்மணே நமஃ

# பிரமரகசிய சோதிட அரிச்சுவடி

## இரண்டாம் பாகம்

## துவாதசபாவகம்

| | | | |
|---|---|---|---|
| 12<br>விரையம்<br>உபயம் | 1<br>லக்கினம்<br>சரம் | 2<br>குடும்ப, நேத்தி<br>ஸ்திரம் | 3<br>சகோதரர்<br>உபயம் |
| 11<br>லாபம்<br>ஸ்திரம் | எந்தராசி லக்கினமாக ஏற்படுகிறதோ அதையே முதல் பாவகமாக வைத்து மற்றவைகளை முறையே கணக்கிட வேண்டியது. | | 4<br>மாதுரு<br>சரம் |
| 10<br>கர்மம்<br>சரம் | | | 5<br>மாதுல, பிதா<br>ஸ்திரம் |
| 9<br>பிதுர், பாக்கி<br>உபயம் | 8<br>ஆயுள்<br>ஸ்திரம் | 7<br>களத்திரம்<br>சரம் | 6<br>ரோகம்<br>உபயம் |

1-வது, லக்கினாதிபதி—மெய்—நிறம்— அழகு—வடிவம்—உதிரம்—சிரம் — சிந்தை — கிலேசம்—லட்சணம்—கீர்த்தி—மூர்த்திகரகம்—பூமியிலே சுபம்—சந்தோஷம்— ஆயுள் முதலியவைகளைத் தெரிவிப்பனவாம்.

2-வது குடும்பம் — தனம் — சவுபாக்கியம் — நேத்திரம்—வித்தை — மிகுந்த செல்வம்—வாக்கு—சாஸ்திர கேள்விகள் — கமனம் — மனம் உத்தேசம் — கனம — பிரியங் கொள்ளும்படியான பொன்னுபரணம் — நவரத்தினம் முதலியவைகளைத் தெரிவிப்பனவாம்.

3-வது, இளைய சகோதரம் — இராஜ காரியம் — வெள்ளி வைபோகம் — ஆளடிமை — வீரியம் — பலம் தவேர்—காதுநோய் — அணிகலம் — கர்ண பூஷணம் — பொஷண கலன்கள் — வீரம் — உத்தியோகம்—தைரியம் முதலியன தெரிவிப்பனவாம்.

4-வது, மாதுரு—வித்தை— வாகனம்— சுபம்— வியாபாரம்—வெல்லும்படியான மேன்மை—சவுக்கியம்—விருந்து—உறவினர்—பரஸ்தரீ கமனம்—வாசனைத் திரவியம்—பால் பசு கன்று—தேவாலயம் முதலியவை தெரிவிப்பனவாம்.

5-வது, அம்மான்—பிதாவின் புத்திரர்—புத்திரி—பூர்வத்தில் செய்த புண்ணியம்—வித்துவான்களின் பிரபந்தம்—கர்ப்பாதானம்—மந்திரங்கள்—வித்தை—விதரணம்—புத்தி—பிரபு முதலியவைகளைத் தெரிவிப்பனவாம்.

6-வது, ரோகம்—சத்துரு—பீடை— ஆயுதங்களால் காயம—பங்காளிகளால் துன்பம்—யுத்தம்—நோய்—பொல்லாத ஆபத்து—திருடர் ஸ்திரிகள்—பாம்பு முதலியவைகளால் அபாயம்— அதிகாரம—சிறைபடுதல் முதலியவைகளைத் தெரிவிப்பனவாம்.

7-வது, மனைவி—விவாகம்—பெண்டு பிள்ளைகளுக்கு உண்டாகிய சுபம்—விவகாரம்—கலியாணத்திற்கு உரியநாள் பின்தாரம் முதலியவைகளைத்தெரிவிப்பனவாம்.



8-வது, ஆயுள்—ஆயுக பீடை—யுத்தம்—மலையேறி விழ்தல—வியாதி—விக்கினம—கிலேசம்—பலதுக்கம் — துன்பம் — விரணம் — அதிகசெலவு — பகை—மரணம்—முயற்சிக் கேடு—முதலியவைகளைத் தெரிவிப்பனவாம்.

9-வது, பிதுர்பாக்கியம்—மர்மம்—பாக்கியம்—சத்திரம்—சாவடி— புண்ணியம் — குளம—உபதேசம் — தடாகம் — தண்ணீர்ப்பந்தல்—செல்வம் — பகதிமுதலானவைகளைத் தெரிவிப்பனவாம்.

10-வது, சர்மம்—பற்பல புண்ணியம்—பட்டணங்கள்—நாடு தன்பெயரால் உண்டாக்கல்—இரக்கம்—மெய்ஞ்ஞானம்—பூஜை—தகப்பன் செய்த பாவமொழித்தல்— தெய்வபக்தி — பராக்கிரமம் — போர்பிரதாபம்—இரவின் வைபோகம்—போஜன ருசிகரம் முதலியவைகளைத் தெரிவிப்பனவாம்.

11-வது, லாபம்—ஜாதகன் மூத்த சகோதரம்—சேவகஞ் செய்பவர்—இளைய மனைவி—பொன்—விந்தை—பயிர்— அஷ்டம்—நல்லறிவு—ஆந்தோளி, மனதுக்கம் தீரல்—ஆடை, ஆபரண முதலானவைகளைத் தெரிவிப்பனவாம்.

12-வது, விரையம்—அன்னிய தேச உத்தியோகம்—பணம்—செலவுடன் உண்டாகும் போகம்—தூக்க சவுக்கியம்—விவாதம்—தொழிலபுரி கன்மம்—தான தர்மம்—புண்ணியம்— தியாகம்—ஆகாதவை விருத்தி முதலானவைகளைத் தெரிவிப்பனவாம்.

மேற்சொல்லிய 12-பாவகமும் லக்கின முதல் 12-இராசிக குடையது. இவை 1-லிருந்து 12-ஆதினத்திற்கும், இ பூலோக மாண்டர்களுக்கு உண்டாகும் படியான சுகதுக்க முதலியவைகளைச் சொல்லுகிறதென்றறிக.

பிதுர்:—பிதா ஒன்பதா மிடமும், மாதுர்-மாதா நாலா மிடமும், புருஷன்-பெண் ருதுவுக்கு ஏழாமிடமும் புருஷன்-பெண் ஜனனத்திற்கு ஒன்பதா மிடமும் கணித விதியாகும்.

### நவாங்கிசப் பலன்

சூரியன்:—பித்ததேகி, புத்திசாலி, கோபி, கண்ணழகு, சத்தியவான், மயிர் கேதம் சிவப்பு, நல் சிநேகம், சாந்தம், பெறுவயிறு.

சந்திரன்:—நீர் பிரியன், வாத சிலேத்துமம், சிநேகம், ஈதல், தைரியம் நற்குணம், சிறுகண்கள், கல்வி, செல்வம்.

செவ்வாய்:—முன்கோபி, சிவப்பு பித்தம், திரிபவன், வஞ்சகன், முதுகில் மருவு, தொத்துவாய், பேடி

புதன்:—அழகு, ரூபம், உண்மை, ஸ்திரீ சிநேகம், தனம், கல்வி, தர்மம், தைரியம், மானி, பாடகன் தெய்வ பக்தி, நன்றியை யோசிப்பவன்.

குரு:—ஆண் புத்திரர், புண்ணியன், பாரிய சரீரன், செலவன், கண்ணழகு, நல்ல கியானி, கீர்த்தி, அடர்ந்தமயிர், கபடில்லை.

சுக்கிரன்:—பாரிய தேகம், சுருண்ட மயிர், தர்மம், நற்குணம், புத்திசாலி, தெய்வ பக்தி, பசு முதலிய விருத்தி, தேசு, அழகு, சுகம்,

சனி:—துக்கன், பொய்யன், கறுத்த மயிர், சோற்று ராமன், நீல தேகம், எளிமை, குள்ளன், இராஜ உருவு, தைரியசாலி.

ராகு:—தர்க்கன், நன்றி விசுவாசம், மாந்திரீக நிபுணன், வஞ்சகன், புளிக்காரன், இல்லாதவர் களைப புகழ்தல.

கேது:—சாஸ்திரம் பேசுபவன், வைத்தியன், சிநேகி, ரக்ஷிப்பவன், ஈதல், அழகிய தேகம்.

---



## இராசி தத்துவங்கள்

| ராசி | அங்கம் | குணம் | அதிபதி |
|---|---|---|---|
| மேஷம் | சிரசு | கொடூரம் | செவ்வாய் |
| ரிஷபம் | முகம் | சவுமியம் | சுக்கிரன் |
| மிதுனம் | மார்பு | கொடூரம் | புதன் |
| கடகம் | இருதயம் | சவுமியம் | சந்திரன் |
| சிங்கம் | வயிறு | கொடூரம் | சூரியன் |
| கன்னி | கடிப்பிர | சவுமியம் | புதன் |
| துலாம் | நாபி | கொடூரம் | சுக்கிரன் |
| விருச்சிகம் | லிங்கம் | சவுமியம் | செவ்வாய் |
| தனுசு | துடை | கொடூரம் | குரு |
| மகரம் | கால் | சவுமியம் | சனி |
| கும்பம் | கண்டை | கொடூரம் | சனி |
| மீனம் | பாதம் | சவுமியம் | குரு |

| ராசி | பலம் | ஓட்டம் | திசை |
|---|---|---|---|
| மேஷம் | இரவு | சரம் | கிழக்கு |
| ரிஷபம் | இரவு | ஸ்திரம் | தெற்கு |
| மிதுனம் | இரவு | உபயம் | மேற்கு |
| கடகம் | இரவு | சரம் | வடக்கு |
| சிங்கம் | பகல் | ஸ்திரம் | கிழக்கு |
| கன்னி | பகல் | உபயம் | தெற்கு |
| துலாம் | பகல் | சரம் | மேற்கு |
| விருச்சிகம் | பகல் | ஸ்திரம் | வடக்கு |
| தனுசு | இரவு | உபயம் | கிழக்கு |
| மகரம் | இரவு | சரம் | தெற்கு |
| கும்பம் | பகல் | ஸ்திரம் | மேற்கு |
| மீனம் | இரவு | உபயம் | வடக்கு |

# இராசி தத்துவங்கள்

| ராசி | பேதம் | ஜாதி | உருவு |
|---|---|---|---|
| மேஷம் | ஆண்-சதுஷ் | க்ஷத்திரிய | ஆடு |
| ரிஷபம் | பெண் | வைசிய | எருது |
| மிதுனம் | ஆண்-நர | சூத்திர | அலி |
| கடகம் | பெண்-ஜலரச | பிராமண | நண்டு |
| சிங்கம் | ஆண்-சதுஷ் | க்ஷத்திரிய | சிங்கம் |
| கன்னி | பெண்-நர | வைசிய | கன்னி |
| துலாம் | ஆண்-நர | சூத்திர | திராசு |
| விருச்சிகம் | பெண்-கீடக | பிராமண | தேள் |
| தனுசு | ஆண்-நர-சது | க்ஷத்திரிய | வில் |
| மகரம் | பெண்-சது-ஜல | வைசிய | முதலை |
| கும்பம் | ஆண்-நர | சூத்திர | குடம் |
| மீனம் | பெண்-ஜலரச | பிராமண | மீன் |

| ராசி | தத்துவம் | வண்ணம் | உதயம் |
|---|---|---|---|
| மேஷம் | அக்கினி | இரத்த | பிரட்டோத |
| ரிஷபம் | பூமி | சுவேத | ,, |
| மிதுனம் | வாயு | கிளி | சிரம் |
| கடகம் | ஜலம் | சுவேத | பிரட்டோத |
| சிங்கம் | அக்கினி | வெண்மை | சிரம் |
| கன்னி | பூமி | சித்திர | சிரம் |
| துலாம் | வாயு | நீல | சிரம் |
| விருச்சிகம் | ஜலம் | பொன் | சிரம் |
| தனுசு | அக்கினி | கபில | பிரட்டோத |
| மகரம் | பூமி | வெண்மை | ,, |
| கும்பம் | வாயு | வெண்மை | சிரம் |
| மீனம் | ஜலம் | சுவேத | பிரட்டோத |



# கிரகங்களின் நட்பு, பகை, சமம்

| கிரகங்கள் | சூரியன் | சந்திரன் | செவ்வாய் | சமம் |
|---|---|---|---|---|
| சூரியன் | —— | நட்பு | நட்பு | சமம் |
| சந்திரன் | நட்பு | —— | சமயம் | நட்பு |
| செவ்வாய் | நட்பு | நட்பு | —— | பகை |
| புதன் | நட்பு | பகை | சமயம் | —— |
| வியாழம் | நட்பு | நட்பு | நட்பு | நட்பு |
| சுக்கிரன் | பகை | பகை | சமம் | நட்பு |
| சனி | பகை | பகை | பகை | நட்பு |

| கிரகங்கள் | வியாழன் | சுக்கிரன் | சனி | ராகு, கேது |
|---|---|---|---|---|
| சூரியன் | நட்பு | பகை | பகை | பகை |
| சந்திரன் | சமம் | சமம் | சமம் | பகை |
| செவ்வாய் | நட்பு | சமம் | சமம் | சமம் |
| புதன் | சமம் | நட்பு | சமம் | சமம் |
| குரு | —— | பகை | சமம் | சமம் |
| சுக்கிரன் | சமம் | —— | நட்பு | சமம் |
| சனி | சமம் | நட்பு | —— | சமம் |

### சகடயோகம்

குருவுக்கு சந்திரன், 6-8-12-ல் சகடமென்று சொல்வது இதில் மாரகத்திற்கு சமானமாகிய கஷ்டத்தைக் கொடுக்கும். ஆனால் கிரகம் பீடிதமா யிருந்தால் மாரகத்தையே கொடுக்கும்.

## கிரக தத்துவ சீலங்கள்

| கிரகம் | உறுப்பு | ஜாதி | குணம் |
|---|---|---|---|
| சூரியன் | சிரம் | க்ஷத்திரியன் | சத்துவம் |
| சந்திரன் | முகம் | வைசியன் | சத்துவம் |
| செவ்வாய் | மார்பு | க்ஷத்திரியன் | தாமதம் |
| புதன் | மடி | சூத்திரன் | ராஜஸம் |
| குரு | வயிறு | பிராமணன் | சத்துவம் |
| சுக்கிரன் | மூக்கு | பிராமணன் | ராஜஸம் |
| சனி | தொடை | சண்டாளன் | தாமதம் |
| ராகு | கை | சண்டாளன் | தாமதம் |
| கேது | கால் | சண்டாளன் | தாமதம் |

| கிரகம் | ராசி | ரூபம் | நிறம் |
|---|---|---|---|
| சூரியன் | ஆண் | நடு | சிவப்பு |
| சந்திரன் | பெண் | குள்ளம் | வெள்ளை |
| செவ்வாய் | ஆண் | குள்ளம் | சிவப்பு |
| புதன் | பேடி | நெட்டை | பசுமை |
| குரு | ஆண் | நெட்டை | பொன் |
| சுக்கிரன் | பெண் | நடு | வெள்ளை |
| சனி | அலி | குள்ளம் | கருமை |
| ராகு | பெண் | நெட்டை | கருமை |
| கேது | அலி | நெட்டை | சிவப்பு |



## கிரக தத்துவ சீலங்கள்

| கிரகம் | குணம், கல்வி | தத்துவம் | அந்தஸ்து |
|---|---|---|---|
| சூரியன் | பாபர்-சம-தெ | பித்தம் | அரசன் |
| சந்திரன் | சுபர்-தமிழ் | சிலேத்துமம் | அரசன் |
| செவ்வாய் | பாபர்-தெலு | பித்தம் | சேனாதிபதி |
| புதன் | சுபர்-கணித | வாத-பித்-சிலே | யுவராஜன் |
| குரு | சுபர்-சம-தெ | சிலேத்துமம் | மந்திரி |
| சுக்கிரன் | சுபர்- ,, | வாதம்-சிலேத் | மந்திரி |
| சனி | பாபர்-மற்றது | வாதம் | தாசன் |
| ராகு | பாபர்- ,, | பித்தம் | தாசன் |
| கேது | பாபர்- ,, | பித்தம் | தாசன் |

| கிரகம் | பொருள் | குலம் | அந்தஸ்து |
|---|---|---|---|
| சூரியன் | தாம்பரம் | காசிபர் | கிழக்கு |
| சந்திரன் | திரவியம் | ஆந்திரேயர் | மேற்கு |
| செவ்வாய் | பொன்-மணி | பாரத்துவாச | தெற்கு |
| புதன் | பித்தளை, வெ | ஆந்திரேயர் | வடக்கு |
| குரு | வெள்ளி | ஆங்கிரதர் | ஈசான்யம் |
| சுக்கிரன் | முத்து | பார்க்கவர் | ஆக்னேயம் |
| சனி | இரும்பு-ஈயம் | காசிபர் | மேற்கு |
| ராகு | கருங்கல் | பைடீசன் | |
| கேது | துருக்கல் | ஜயமுனிதே | |

### விதி - மதி - கெதி

விதி என்பது உயிராகிய ஜன்ம லக்கினம், மதி என்பது உடலாகிய சந்திரா லக்கினம், கதி என்பது ஜனன கால சூரிய லக்கினம் இம்மூன்றும் முறையே அறிந்து பலாபலன் சொல்லுதல் சோதிட பகுத்தறிவாகும்.

## கிரக தத்துவ சீலங்கள்

| கிரகம் | அதிதேவதை | அதிபதி | வாகனம் |
|---|---|---|---|
| சூரியன் | அக்கினி | அக்கினி | தேர் |
| சந்திரன் | ஜலம் | ஜலம் | சப்பிரம் |
| செவ்வாய் | குகந்தன் | அக்கினி | அன்னம் |
| புதன் | மால் | பூமி | குதிரை |
| குரு | இந்திரன் | ஆகாயம் | யானை |
| சுக்கிரன் | சசிதேசி | ஜலம் | கருடன் |
| சனி | பிரமன் | வாயு | காகம் |
| ராகு | தர்க்கை | | ஆடு |
| கேது | சித்திரபுத்ராள் | | சிங்கம் |

| கிரகம் | பருவம் | வடிவம் | எதில் பலம் |
|---|---|---|---|
| சூரியன் | விருத்தாப்பி | சதுரம் | எலும்பு |
| சந்திரன் | பாலியம் | வட்டம் | ரத்தபுஷ்டி |
| செவ்வாய் | கௌமாரம் | திரிகோணம் | எலும்பு-மச்ச |
| புதன் | பாலியம் | அம்பு | சர்மம் |
| குரு | யௌவனம் | நீள்சதுரம் | மூளை |
| சுக்கிரன் | மத்திபம் | ஐங்கோணம் | இந்திரியம் |
| சனி | விருதாப்பிய | வில் | நரம்பு |
| ராகு | | கொடி | குடல் |
| கேது | | முச்சில் | குடல் |

மாரகாள் — சரராசிக்கு 2—7—க்கும் ஸ்திர ராசிக்கு 3-8-க்கும் உபய ராசிக்கு 7-11-க்கும், அதிபர்களும், இருப்பவர்களும், பார்க்கப்பட்டவர்களும், அவரவர் திசாபுத்திகளில் மாரகமாகும்.



## கிரக தத்துவ சீலங்கள்

| கிரகம் | ருசி | ஊன் | வஸ்திரம் |
|---|---|---|---|
| சூரியன் | கசப்பு-காரம் | சுடுகை | சிவப்பு |
| சந்திரன் | உப்பு | குளிர் | வெள்ளை |
| செவ்வாய் | கசப்பு | சூடு | சிவப்பு |
| புதன் | புளிப்பு | மத்திபம் | பசுமை |
| குரு | மதுரம் | குளிர் | தங்கம் |
| சுக்கிரன் | புளிப்பு | குளிர் | வெள்ளி |
| சனி | துவர்ப்பு | மத்திபம் | நீலக்கரப்பு |
| ராகு | புளிப்பு | மத்திபம் | கருமை |
| கேது | புளிப்பு | மத்திபம் | சிவப்பு |

| கிரகம் | பூதம் | நவத்துவாரம் | வலிமை |
|---|---|---|---|
| சூரியன் | தேய்வு | வலது நாசி | பகல் |
| சந்திரன் | அப்பு | இடது நாசி | இரவு |
| செவ்வாய் | பிரிதிவி | வாய்வு | இரவு |
| புதன் | வாய்வு | இடது செவி | பொது |
| குரு | தேய்வு | வலது செவி | பகல் |
| சுக்கிரன் | அப்பு | ஆ-பெ-குறி | பகல் |
| சனி | ஆகாயம் | ஆசனம் | இரவு |
| ராகு | ஆகாயம் | வலக்கண் | பொது |
| கேது | ஆகாயம் | இடக்கண் | பொது |

ஒரை—ஜனன லக்கினத்தை 2-பாகஞ் செய்து 2-ஆணுயிருந்தால் முன்சூரியனும், பின்சந்திரனும், 2-பெண்ணுயிருந்தால் முன்சந்திரனும், பின்சூரியனும் என்றறிக.

## கிரக தத்துவ சீலங்கள்

| இரகம் | தானியம் | புஷ்பம் | தூபம் |
|---|---|---|---|
| சூரியன் | கோதுமை | செந்தாமரை | சந்தனம் |
| சந்திரன் | பச்சரிசி | வெ-அல்லி | சாம்ராணி |
| செவ்வாய் | துவரை | செண்பகம் | குங்கிலிய |
| புதன் | சிறுபயர் | வெ-காந்தன் | கர்ப்பூரம் |
| குரு | கடலை | முல்லை | ஆம்பல் |
| சுக்கிரன் | மொச்சை | தாமரை | இலவங்கம் |
| சனி | எள்ளு | கருங்குவளை | கருங்காலி |
| ராகு | உளுந்து | கரு-மந்தர் | கடுகு |
| கேது | கொள்ளு | செவ்வல்லி | செமமரம் |

| இரகம் | இரத்தினம் | சமித்து | வலிமை-இரக |
|---|---|---|---|
| சூரியன் | மாணிக்கம் | எருக்கு | ராகு-கேது |
| சந்திரன் | முத்து | முருக்கு | சூரியன் |
| செவ்வாய் | பவளம் | கருங்காலி | சனி |
| புதன் | பச்சை | நாயுருவி | செவ்வாய் |
| குரு | புஷ்பராகம் | அரசு | சுக்கிரன் |
| சுக்கிரன் | வைரம் | அத்தி | சந்திரன் |
| சனி | நீலம் | வன்னி | குரு |
| ராகு | கோமேதகம் | அறுகு | |
| கேது | வைடூரியம் | தர்ப்பை | |



## கிரக தத்துவ சீலங்கள்

| இரகம் | பலனளவு | ராசிபார்வை | பார்வை-அ | மறைவு |
|---|---|---|---|---|
| சூரியன் | பூ-$\frac{1}{2}$ அ-$\frac{3}{4}$ | 1—7 | 1 | 8—12 |
| சந்திர | பூ-1 | 1—7 | 1 | 3-6-8-11 |
| செவ் | பூ-$\frac{1}{4}$ அ-$\frac{3}{4}$ | 1-7—4-8 | 1-7(1)48($\frac{1}{2}$ | 8—12 |
| புதன் | $\frac{1}{2}$ | 1—7 | 1 | 3-6-8-12 |
| குரு | பூ-1 | 1-7—5-9 | 1 | 3-6-8-12 |
| சுக்கிர | பூ-$\frac{3}{4}$ அ-$\frac{1}{4}$ | 1—7 | 1 | 8— 3 |
| சனி | அ-1 | 1-7—3-10 | 1-7(1)3-10 | 8—12 |
| ராகு | அ-1 | 1-7—3-11 | ,, ($\frac{1}{2}$ | 8—12 |
| கேது | அ-1 | 1-7—3-11 | ,, | 8—12 |

## இராயில் கிரகங்களின்

### உச்ச நீச்ச நட்பாட்சி பகை

### மூலத்திரிகோண திக்கு

| — | மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் |
|---|---|---|---|---|
| உச்சம் | சூரியன் | சந்திரன் | பரிவே | குரு |
| நீச்சம் | சனி | ரா-கே | இந்திரதனு | குளி-செ |
| நட்பு | வெ-பு-ரா கேது | செ-ச-பு வி | சந்-சனி-கு சே-கே | சனி-பு |
| ஆட்சி | செவ்வாய் | சுக்கிரன் | புதன் | சந்திரன் |
| பகை | சந்-ராகுகே | சூரியன் | சூரியன் | சு-சூ-ர-கே |
| மூலத்தி | செவ்வாய் | சந்திரன் | ,, | ,, |
| திக்கு | கிழக்கு | தெற்கு | மேற்கு | வடக்கு |

# இராசியில் கிரகங்களின்

## உச்ச நீச்ச நட்பாட்சி பகை
## மூலத்திரிகோண திக்கு

| — | சிங்கம் | கன்னி | துலாம் | விருச்சிகம் |
|---|---|---|---|---|
| உச்சம் | தூமன் | புதன் | சனி | ரா-கே |
| நீச்சம் | காலன் | சுக்கிரன் | சூரியன் | சந்திரன் |
| நட்பு | சு,ரா,கே | சந்-செ-கு, ச-ரா-கே | பு-கு-ரா-கே | சுக்கிரன் |
| ஆட்சி | சூரியன் [செ | புதன் | சுக்கிரன் | செ-ரா-கே |
| பகை | ச-சு-ர,கே, | சூரியன் | சந்திரன் | சு-குரு-ச |
| மூலத்தி | சூரியன் | புதன் | சுக்கிரன் | ரா-கே |
| திக்கு | கிழக்கு | தெற்கு | மேற்கு | வடக்கு |

| — | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|
| உச்சம் | இந்திரதனு | குளி,செ | காலன் | சுக்கிரன் |
| நீச்சம் | பரிவேடன் | குரு | தூமன் | புதன் |
| நட்பு | சு-ச-சந்-பு-ரா-கே | பு-சு-ரா கேது | பு—சு சனி | ச-சந்-சு ரா-கே |
| ஆட்சி | குரு | சனி | சந்-பு-செ-ரா-கே | குரு |
| பகை | செவ்வாய் | சு, சந் | | ரா-கே |
| மூலத்தி | குரு | ,, | சனி | ,, |
| திக்கு | கிழக்கு | தெற்கு | மேற்கு | வடக்கு |

காலம்—இந்த காலம் ஒரு மணிக்கு ஒருதரம் மாறும். அதாவது, ஆணு யிருந்தால் துவக்கம், ஞா-செ-வி-சனி-பெண்ணு யிருந்தால் துவக்கத்தில் புதன்-வெள்ளி



### திரிகோண ராசிகள்

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் |
| சிங்கம் | கன்னி | துலாம் | விருச்சிகம் |
| தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |

### சுபக்கிரகங்கள்

பூர்வ பக்ஷம் ஜெனனத்திற்கு:—

வியாழன், சந்திரன், முழுசுபர்கள்
சுக்கிரன் $\frac{3}{4}$, புதன் $\frac{1}{2}$, சூரியன், செவ்வாய் $\frac{1}{4}$

அமரபக்ஷம் ஜனனத்திற்கு :—

சனி, ராகு, கேது, முழுசுபர்கள்
சூரியன், செவ்வாய் $\frac{3}{4}$ புதன் $\frac{1}{2}$, சுக்கிரன் $\frac{1}{4}$

ஆனல் அனுபோகத்தில் சாதாரணமாய் வியாழன், பூர்ணசந்திரன், புதன, சுக்கிரன், சுபர்களும், சனி, ராகு, கேது, சூரியன், செவ்வாய், அமரச்சந்திரன் பாவிகளுமாம்.

### கிரக காரகங்கள்

| | |
|---|---|
| சூரியன் | பிதுர்காரகன் |
| சந்திரன் | மாதுர்காரகன் |
| செவ்வாய் | சகோதரகாரகன் |
| புதன் | மாதுலாக்காரகன் |
| கேது | மாதாமைக்காரகன் |
| குரு | தனபுத்திரகாரகன் |
| சுக்கிரன் | வாகனகளத்திரகாரன் |
| சனி | ஆயுட்காரகன் |
| ராகு | ஞான மோக்ஷகாரகன் |

### கிரகங்களின் பலம், காலம், இடம்

அசுபர்க்கு:—ஆடிமீ முதல் 6-மீ தக்ஷிணாயனத்திலும் அமர பக்ஷத்திலும் பலன்.

சுபருக்கு:—உத்தராயனத்திலும், பூர்வ பக்ஷத்திலும் பலன்.

புதனும் குருவும் லக்கினத்திலும், சுக்கிரனும் சந்திரனும், நான்கிலும், சனி, ராகு ஏழிலும், சூரியன் செவ்வாய் பத்திலும் வலியராம்.

ஒன்று உதயம், நான்கு கீர்க்கிழ், ஏழு அஸ்தமானம், பத்து உச்சம்.

புதனுக்கு செவ்வாய் வலியன், செவ்வாய்க்கு சனி வலியன், சனிக்கு குரு வலியன், குருவுக்கு சுக்கிரன் வலியன், சுக்கிரனுக்கு சந்திரன் வலியன், சந்திரனுக்கு சூரியன் வலியன், சூரியனுக்கு இராகு வலியனாகும்.

### கிரகங்களின் சுப பாப கணிதம்

சந்திரன், குரு முழுச்சுபர். சுக்கிரன் முக்காற் சுபன். புதன் அரைச்சுபன். குறைந்த சந்திரன் காற்சுபன். சந்திரன் அமாவாசையிற் புதனோடு கூடின முக்காற் சுபன்.

சனி, ராகு, முழுப்பாபர், செவ்வாய் முக்காற் பாபி, சூரியன் அரைப்பாபி, பாபருடனே கூடிய புதனும் சந்திரனும் காற்பாபர் இராகுவோடு கூடிய குரு முழுப்பாபியாம்.

———



### ஒவ்வொரு திசைகளுக்கும்

### போதகர், வேதகர், பாசகர், காரகர்.

போதகர் :—பாகப்பலன் கொடுப்பவர். வேதகர்—பாகப்பலனை மாறுபடுத்துகிறவர். பாசகர்—தேறியதைக் கிடைக்கச் செய்பவர். காரகர்—சம்பாதித்ததைப் பெறச் செய்பவர்.

| திசை | போதகர் | வேதகர் | பாசகர் | காரகர் |
|---|---|---|---|---|
| சூரியன் | செவ்வாய் | சுக்கிரன் | சனி | குரு |
| சந்திர | செவ்வாய் | சூரியன் | சுக்கிரன் | சனி |
| செவ் | சந்திரன் | புதன் | சூரியன் | சனி |
| புதன் | குரு | செவ்வாய் | சந்திரன் | சுக்கிரன் |
| குரு | செவ்வாய் | சூரியன் | சனி | சந்திரன் |
| சுக்கிர | குரு | சனி | புதன் | சூரியன் |
| சனி | சந்திரன் | செவ்வாய் | சுக்கிரன் | குரு |

இராகு கேதுகளுக்கு இவை யில்லையாம்.

### துவிஸ்தான பலன்

ஸ்தானம் 5-விதம். அதாவது, கேந்திரம், பணபரம், ஆபோக்கிலியம், உபஜெயம், திரிகோணமாயிருந்த போதிலும், முக்கியமாய் ஜோதிடத்தில் கேந்திரமும், திரிகோணமும், வழங்குகிறபடியால், 1-4-7-10 ஆகிய கேந்திர இடங்களில் பாபர்களும், 1-5-9 ஆகிய திரிகோண இடங்களில் சுபர்களும் இருந்தால் மிதமிஞ்சின நல்ல பலனைக் கொடுப்பார்கள். மேலும் 6-3-11-ல் பாபக்கிரகங்கள் இருந்தாலும் அதிக நல்லதென்றறியவும்.

## கிரகத் தொடர்ச்சியின் பலன்

லக்கின முதல்7— வீடுகளில் கிரகம் தொடர்ச்சியாக இருந்தால், புண்ணியன், புத்தி சாலி, வித்துவான், பிரசங்கி, தைரியம், உற்சாகம்.

6— வீடுகளில் கிரகம் தொடர்ச்சியாக விருந்தால் அரசன், சுகதேகி. அதிர்ஷ்டன், பொறுமை, தவா ளின்.

5— மேன்மை, சந்தோஷம். பிரபுக் கள் நேசம், தனவான், சாஸ்திரம் தெரிபவன்.

4— தொழில் செய்து பணம் சம்பாதிப் பவன், பெருமை, சுற்றத்தார் பக்ஷம்.

3— வல்லமை, சம்பத்து, பலபாஷை யறிதல், அதிகமாய்ப் பணம் சம் பாதிப்பவன்.

2— சரசகுணம், தீர்க்காயுள், பிரபுக் கள் கிழ்ப்படிதல்.

1— வறுமை, இளைத்த தேகம், பொல் லாப்பு, விரையம்.

## நக்ஷத்திரங்கள் இராசிகளில் சஞ்சரிக்கும் அளவு

அசுவனி—பரணி—கிர்த்திகை $\frac{1}{4}$ — மேஷம்
கிர்த்திகை $\frac{3}{4}$ ரோகணி—மிருகசீரிடம் $\frac{1}{2}$ — ரிஷபம்
மிருகசீரிடம் $\frac{1}{2}$ திருவாதிரை—புனர்பூசம் $\frac{3}{4}$ — மிதுனம்
புனர்பூசம் $\frac{1}{4}$ பூசம்—ஆயிலியம் — கடகம்



மகம்—பூரம்—உத்திரம் $\frac{1}{4}$ — சிங்கம்
உத்திரம் $\frac{1}{4}$ அஸ்தம்—சித்திரை $\frac{1}{2}$ — கன்னி
சித்திரை $\frac{1}{2}$ சுவாதி—விசாகம் $\frac{3}{4}$ — துலாம்
விசாகம் $\frac{1}{4}$ அனுஷம்—கேட்டை — விருச்சிகம்
மூலம்—பூராடம்—உத்திராடம் $\frac{1}{4}$ — தனுசு
உத்திராடம் $\frac{3}{4}$ திருவோணம்—அவிட்டம் $\frac{1}{2}$ — மகரம்
அவிட்டம் $\frac{1}{2}$ சதயம்—பூரட்டாதி $\frac{3}{4}$ — கும்பம்
பூரட்டாதி $\frac{1}{4}$ உத்திரட்டாதி—ரேவதி — மீனம்

## இராசிகளுக்குரிய நாழிகைகள்

| | |
|---|---|
| மேஷம்—$4\frac{1}{2}$ | துலாம்—5 |
| ரிஷபம்—$4\frac{3}{4}$ | விருச்சிகம்—$5\frac{1}{4}$ |
| மிதுனம்—$5\frac{1}{4}$ | தனுசு—$5\frac{1}{2}$ |
| கடகம்—$5\frac{1}{2}$ | மகரம்—$5\frac{1}{4}$ |
| சிங்கம்—$5\frac{1}{4}$ | கும்பம்—$4\frac{3}{4}$ |
| கன்னி—5 | மீனம்—$4\frac{1}{4}$ |

## கிரகங்கள் ஒவ்வொரு ராசியில் சஞ்சரிக்கும் அளவு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சூரியன் | மாதம் | 1 | வியாழன் | வருஷம் | 1 |
| சந்திரன் | நாள் | $2\frac{1}{4}$ | சனி | ,, | $2\frac{1}{2}$ |
| செவ்வாய் | மாதம் | $1\frac{1}{2}$ | ராகு | ,, | $1\frac{1}{2}$ |
| புதன் | ,, | 1 | கேது | ,, | $1\frac{1}{2}$ |
| சுக்கிரன் | ,, | 1 | | | |

## கிரகம் சுற்றிவரும் பக்கம்

சூரியன் முதல் சனி வரையில் வலது பக்கம்
ராகு கேது இடது பக்கம்

## கிரக மகாதிசை வருஷங்களும் அதற்குரிய நாம நக்ஷத்திரங்களும்

சு—சே—சோ—ல—அசுவனி
ம—மி—மு—மே—மகம்
யே—யோ—பா—பி—மூலம்—கேதுதிசை வரு 7
வி—வு—லே—லோ—பரணி
மோ—ட—டி—டு—பூரம்
பு—த—ப்ப—ட—பூராடம்—சுக்கிரன் ,, 20
ஆ—இ—ஊ—ஏ—கிர்த்திகை
டே—டோ—ப—பி—உத்திரம்
பே—போ—ஜ—ஜீ—உத்திராடம்—சூரியன் ,, 6
ஓ—வ—வீ—வூ—ரோகணி
பு—ஷ—ண—ட்ட—அஸ்தம்
க்கி—க்கு—கே—கோ—திருவோ—சந்திரன் ,, 10
வே—வோ—க—கி—மிருகசிரி
பே—போ—ர—ரி—சித்திரை
க—கி—கு—கே—அவிட்டம்—செவ்வாய் ,, 7
கு—க—ங—க்ச—திருவாதிரை
ரு—ரே—ரோ—த—சுவாதி
கோ—ஸ—ஸீ—ஸு—சதயம்—ராகு 8
கே—கோ—அ—ஈ—புனர்பூச
தீ—து—தே—தோ—விசாகம்
ஸே—ஸோ—த—தீ—பூரட்டாதி—குரு ,, 16
ஹ—ஹே—ஹோ—ட—பூசம்
ந—நி—நு—நே—அனுஷம்
த—த்த—ஜ்ச—ஞா—உத்திரட்டாதி—சனி ,, 19
டி—டு—டே—டோ—ஆயிலியம்
நோ—ய—யி—யு—கேட்டை
தே—தோ—ச—சி—ரேவதி—புதன்



இந்த நக்ஷத்திரத் தொடர்பையே திரிகோண நக்ஷத்திரமென்று சொல்லப்படும். அதாவது 1-5-9-கோணமென்றும, அதில் மூன்றாவது கோணம 9-ம், ஸ்தானம் ஆகியதால் திரிகோணமென்பதாம.

## குழந்தை பிறந்த நாழிகையினுல் ஆண் பெண்ணறிய விபரம்.

| ணி | ஞா | திங் | செ | புதன் | வியா | வெ | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| 6 | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் |
| 6½ | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ |
| 7 | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் |
| 7½ | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ |
| 8 | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் |
| 8½ | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ |
| 9 | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் |
| 9½ | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ |
| 10 | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் |
| 10½ | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ |
| 11 | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் |
| 11½ | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ |
| 12 | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் |
| 12½ | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ |
| 1 | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் |
| 1½ | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ |
| 2 | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் |
| 2½ | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ |
| 3 | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் |
| 3½ | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ |
| 4 | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் |
| 4½ | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ |
| 5 | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் |
| 6½ | பெ | ஆண் | பெ | ஆண் | பெ | ஆண் | பெ |

ஒவ்வொரு தினத்திலும் புருஷகாலம் ஸ்திரீ காலம $1\frac{1}{4}$-நாழிகைக்கு ஒருதரம் ஒன்றுக்கொன்று மாறிக் கொண்டே வருகிறதில் ஞாயிறு, செவ்வாய், வியாழன், சனி இந்த தினங்களில் முதலில புருஷ காலம் ஆரம்பம். திங்கள், புதன், வெள்ளி இந்த தினங்களில் முதலில் ஸ்திரீகாலம் ஆரம்பம். மேற் கண்ட தினங்களில் காலை முதல் காலம் ஒன்றுக்கு $1\frac{1}{4}$-நாழிகையாக ஜனன் நாழிகை வரையில் பார்த்து வந்ததில் புருஷ காலம் வந்தால், புருஷ குழந்தை யென்றும், ஸ்திரீ காலம் வந்தால் ஸ்திரீ குழந்தை யென்றும் அறிய வேண்டியது இதற்கு வேறு பட் டாலும் ஜனனமானதாக சொல்லப்பட்ட நாழிகை யும் பிசகாம்.

ஜனனமான தினத்துக்குரிய இராப் பகலுக் குள்ள அகஸ் நாழிகை எத்தனையோ அத்தனையை யும் அசல் வகுத்து வந்த ஈவை முதல் காலத்துக் குள்ள நாழிகையாக வைத்துக்கொண்டு, அது முதற் கொண்டு ஜனன நாழிகை வரையில் கிரமப்படி நடத் திப் பார்க்கிறது முண்டு. ஒவ்வொரு தினத்துக்கு முள்ள புருஷகாலம் ஸ்திரீ காலங்கள் இதனடியிற் கண்ட அட்டவணையில் தெளிவாய் அறியலாம்.

அன்றியும் ஜன்மலக்கினத்தில் பூர்வ பட்சத்துச் சந்திரனிருக்கில் பிறந்த குழந்தை ஆண். அமரபட் சத்துச் சந்திரனிருக்கில் பெண். ஜன்ம லக்கினத் துக்கு ஒற்றிற்ற இராசியில் சனி யிருந்தால் ஆண் இரட்டித்த இராசியில் சனியிருந்தால் பெண் எனறுங் கொள்க.



அன்றியும் நவாம்சை இலக்கினம் புருட இராசி யானுல் புருஷ குழந்தை என்றும், பெண் இராசியா னுல் பெண் குழந்தை யென்றும் கூறும் நூல்களும் உண்டு.

வாரஹோரையினுலே ஆண் பெண் அறிதல்

புருஷகாலவாரங்கள் ஞாயிறு, செவ்வாய், வியா ழன், சனி இவ்வாரங்கள் உதயாதி மணி 6-முதல 6-30 அளவும் ஆண் எனவும், 6-30 முதல் 7-அளவும் பெண் எனவும், கொள்ளவேண்டும். ஸ்திரீ கால வாரங்கள். திங்கள், புதன், வெளளி இவ்வாரங்களி லும் முன்சொல்லிய கால அளவின்படியே பெண் ஆண் எனவும் மாறிக்கொள்க. இங்ஙனமே மற்றுள மணி நேரங்களை யறிந்து உதயமணி 6-தொடங்கி புருஷ வாரமானுல் ஆண் பெண்ணென்றும், ஸ்திரீ வாரமானுல் பெண் ஆண் என்றும் முறையே அரை மணி வீதம் கொண்டு சொல்லினும் அலலது எந்த மணி நேரமானுலும் முன் கூறியபடி முன்னரைமணி வரை ஒரு காலமும், பின்மணி முடிவு பெறும் வரை யுள அரை, மணி நேரம் ஒரு காலமுமாகக் கொண்டும் சொல்லுக.

கர்பத்திலுள்ள சிசு ஆண் பெண் என்பது

கருப்ப ஸ்திரீயின் பெயரெழுத்தைச் சரியாக வெண்ணி மூன்றிற்பெருக்கி வளர்பிறைப் பிரத மைத் திதிமுதல் கேட்க வந்த காலத் திதிவரையும் கூடியதொகையை முன்பெருக்கிய தொகையோடு கூட்டி எழிற்கொடுத்த மிச்சம் ஒற்றையாயின் ஆண், இரட்டையாயின் பெண் என்க.

## ஜாதகக் குறிப்பு மாதிரி

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | இராசி லக்கின கிரகநிலை சக்கரம் | | |
| | | | |
| | | | |

கலியுகாதி. வர்த்தமான சாலிவாகன சகாப்தம் இங்கிலீஷ் -ம் ஹூ மீ உ தமிழ்ஹூ மீ உ கிழமை பக்ஷ திதி நக்ஷத்திரம், நாமயோகம் கரணம் த்தியாஜியம் அஹஸ் இந்த சுபதினத்தில் சூரியோதயாதி அஸ்தாதி நாழிகை விநாடி (மணி மினிட் ) லக்கினத்தில, ம-ா-ா-ஸ்ரீ, அவர்களுக்கு வது புண்ணியகுமார சுபஜனனம், ஜன்மலக்கனம் ற் சென்ற நாழிகை பாக்கி நாழிகை நவாம்சம் ஜன்ம நக்ஷத்திரம் நாழிகை ம் பாதம் ஜனனகாலம் தெசையிற் பாக்கி ஹூ மீ நாள் விநாடி

---

உ

ஓம் நவக்கிரக பரப்ரஹ்மணே நமஃ

# பிரமரகசிய

# சோதிட அரிச்சுவடி

### மூன்றாம் பாகம்

### இராசிகளில் கிரகங்களை அமைக்கும் விதம்

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக்கி | | | ராகு |
| சூரி | | | சங் சனி |
| புத மாக் | | | லக்கி |
| குரு கேது | | | |

இங்கிலீஷ் 1889ஹூ பிப்ரவரிமீ 13உ க்கு சர்வதாரிஹூ மாசிமீ 3உ புதவாரம் சுக்கில பக்ஷ திரியோதசி திதி 25-புனர்பூச நக்ஷத்திரம் 21-54-க்கு மேல் பூச நக்ஷத்திரம் சூரிய உதயாதி நாழிகை $32\frac{1}{2}$ க்கு ஆண் குழந்தை ஜெனனம்.

### பஞ்சாங்கப் பிரகாரம் மாசிமீ கிரகசாரம்

| | | | |
|---|---|---|---|
| அவிட்டம் | 3-ம் | பாதத்தில் | சூரியன் |
| பூரம் | 1-ம் | ,, | சந்திரன் |
| உத்திரம் | 1-ம் | ,, | அங்காரகன் |
| திருவோ | 4-ம் | ,, | வக்ரி-புதன் |
| மூலம் | 3-ம் | ,, | குரு |
| உத்திரட் | 4-ம் | ,, | சுக்கிரன் |
| ஆயில்யம் | 2-ம் | ,, | வக்ரி-சனி |
| புனர்பூசம் | 2-ம் | ,, | ராகு |

| | | | |
|---|---|---|---|
| பூராடம் | 4-ம் | பாதத்தில் | கேது |
| திருவோண | 1-ம் | ,, | குளிகன் |
| பூரம் | 3-ம் | ,, | லக்கினம் |

இதில் சந்திரன் மாத்திரம் சாரத்திலகப்படாது. ஆனால் பஞ்சாங்கத்தில் அன்றையதினம் நக்ஷத்திர நாழிகையைக் கொண்டு பாதமாக பிரிக்கவேண்டியது எப்படியென்றால் அன்றையதினம் பூசநக்ஷத்திரம் ஆதியந்தம் பரமநாழிகை 6½-க்கு பாதம் 1-க்கு நாழிகை 15-முக்காலே யரைக்கால் ஆக மூன்றாம்பாதத்தில் ஜெனனமானபடியால் விஷயத்தில் பூசம் முதற் காலானபடியால் கடகத்தில் போடப்பட்டது இந்த சந்திரன் நின்ற ராசியே உடல் லக்கினமென்றும் சந்திர லக்கினமென்றும், கோசார லக்கினமென்றும சொல்லப்படும்.

### ராசி அறியும் விபரம்

ஒவ்வொரு தினத்திலும் உள்ள பகல் இரவு மொத்த நாழிகை 60-ம் இந்த 12-இராசிகளுக்குமுரிய மொத்த நாழிகையாம். ஒவ்வொரு தினத்தில் மேற்ந்த 12 இராசிகளும் முதலில உதயமாகு மிராசி முதல் வரிசைக் கிரமமாய் ஒன்றின் பின்னொன்றாக உதயமாகி செல்லாகிக் கொண்டிருக்கிறது. சூரிய உதயகாலத்தில சூரியனோடே எந்த இராசி உதயமாகிறதோ அது தான் முதலில உதயமாகு மிராசியாகும், அதை யறிய வேண்டிய விபரம் சூரியன் சித்திரை மாதத்தில மேஷத்திலும், வைகாசி மாதத்தில ரிஷபத்திலும், ஆனி மாதத்தில் மிதுனத்திலும், ஆடி மாதத்தில கடகத்திலும், ஆவணி மாதத்தில் சிம்மத்திலும் புரட்டாசி மாதத்தில கன்னியிலும், ஐப்பசி மாதத்தில் துலாத்திலும், கார்த்திகை மாதத்தில் விருச்சிகத்திலும், மார்கழி மாதத்தில் தனுசிலும், தை மாதத்தில் மகரத்திலும் மாசி மாதத்தில்



கும்பத்திலும், பங்குனி மாதத்தில் மீனத்திலு மிருந்து வருகிறபடியினாலே அந்தந்த மாதத்துக்கு அந்தந்த இராசியின் பேரும் கொடுக்கப்பட் டிருக்கிறது. எந்த மாதத்தில் எந்த இராசியில் சூரியனிருக்கிறதோ அந்த மாதத்தில் அந்த இராசிதான் சூரியனோடு முதலில் உதயமாகிறது ஒவ்வொரு மாதத்துக்கு முரிய இராசி அந்தந்த மாதத்தின் முதல் தேதி முதல் கடைசி தேதி வரைக்கு முதயமாகிக் கொண்டிருக்கிறதில் ஒவ்வொரு தேதியிலும் அதற்கு ஏற்பட்ட பூரா நாழிகையோடும் சூரிய உதயகாலத்தில் உதயமாகிக் கொண்டிருக்கிறதா அல்லது தேதிக்குத் தேதி குறைந்த நாழிகையுட னுதயமாகிறதா வென்பதையும், குறைந்து வருமானால் தேதி ஒன்றுக்கு இத்தனை விகடிகை வீதம் குறைந்து வருமென்பதையும் ஒரு குறிப்பிட்ட தேதியின் உதய காலத்தில் மேற்படி இராசியில் செல்லுபோக பாக்கி யிவ்வள வென்பதையும் அந்த தேதிக்கு மொத்தம் 60-நாழிகை எவ்வித மென்பதையு மறிய வேண்டியது. விபரம் முதல் தேதியில் மட்டு மதற்குரிய பூரா நாழிகையோடு முதயமாகும். மற்றபடி அந்த இராசியின் பூரா நாழிகையை விகடி யாக்கி அதை அந்த மாதத்துக்கு எத்தனை தேதியென்று கண்டு அத்தனை தேதிக்கும் பங்கிட்டு தேதி ஒன்றுக்கு இத்தனை விகடிகை யென்றும் அதைக் குறிப்பிட்ட தேதிக்கு முன் தேதியால் பெருக்கி ஷை இராசி நாழிகையிற் கழித்து மிச்சமான விகடிகை யெதுவோ அதுதான் ஷை குறிப்பிட்ட தேதியின் உதய காலத்தில் ஷை இராசியின் செல்லானது போக பாக்கியா யிருந்த விகடிகை யென்று அத்துடன் மற்ற இராசிகளின் நாழிகைகளையும் சேர்த்துக் கண்டதே அந்த தேதிக்கு மொத்த நாழிகையென்று மறிக, 60-விகடிகை கொண்டது ஒரு நாழிகையாம்.

உதாரணம்:—கார்த்திகை மாதம் 25-தேதியை ஒரு குறிப்பிட்ட தேதியாய் வைத்து மேற்சொல்லியதை விவரித்துக் காட்டுவோம். அதாவது கார்த்திகை மாதத்துக்குரிய இராசி விருச்சிகம். அதற்கு ஏற்பட்ட பூரா நாழிகை $5\frac{1}{2}$-இதை 60 தினால் பெருக்க வந்தது 330-விகடிகை. இதை அந்த மாதத்துக்கு 30-தேதியானதால் 30-தினால் வகுத்து தேதி ஒன்றுக்கு வந்த விகடிகை 11-இந்த விதம் ஷை இராசியும் தேதிக்குத் தேதி குறைந்தே வரும் அதாவது சூரியன் ஷை இராசியில இந்த விதம தேதிக்குத் தேதி கலந்துகொண்டே வருகிறது இதை முந்தின தேதியாகிய 24 தேதியாலும் பெருக்க வந்த விகடிகை 264 இதை ஷை இராசியின் மொத்த விகடிகையாகிய 330-ல் கழித்து மிச்சம் வந்த விகடிகை 66-இது தான் ஷை 25-தேதியில் உதய காலத்தில் ஷை இராசியில் செல்லானது போக பாக்கியாயிருந்த விகடிகை இத்துடன் இதற்கடுத்த இராசியாகிய தனுசு முதல் துலாம் வரையிலுள்ள நாழிகைகளைக் கூட்டி வந்த மொத்த நாழிகை 15 வினடி 36 இத்துடன் சூரிய உதயத்துக்குமுன் விருச்சிகத்தில் செல்லாத வேண்டிய விகடிகை 264-யும் சேர்க்க வந்த மொத்த நாழிகை 60-என்றறிக ($2\frac{1}{2}$-நாழிகை அல்லது 150-விகடிகை கொண்டது கடிகார யந்திரப்படி ஒரு மணி நேரமாகும்.)

## ஜன்ம லக்கினம் அறியும் வகை

முன் விவரித்த விதமாய் ஜனன மாதத்துக்குரிய இராசி நாழிகையில் ஜனனமான தேதியின் உதய காலத்தில் மிச்சமாயிருந்த தெதுவோ அதிலிருந்து ஜனன நாழிகை வரைக்கும் அதே இராசியில் ரவி சென்றிருக்கும் விகடிகளையும் கழித்து வந்த மிச்சத்தையும் அடுத்த இராசிகளின் நாழிகைகளையும் ஒவ்வொன்றாக ஜனன நாழிகை வரைக்கும்



கூட்டி வந்த நாழிகை எந்த இராசியிலொட்டுகிறதோ அந்த இராசி தான் ஜன்மலக்கினமாம்.

உதாரணம்:—பங்குனிமீ 15௳ பகல் 30-நாழிகைக்கு ஒரு குழந்தை ஜனனமானால் ஜன்மலக்கினங் காணவேண்டிய விபரம்.

ஷை மாதத்துக்குரிய மீன இராசியின் மொத்த நாழிகை-4, விநாடி-14-ல் (அந்த மாதத்துக்கு முப்பத்தொன்று தேதியினால்) 15௳ உதய காலத்தின் மிச்சமாயிருந்த விகடிகை 138-தேதி ஒன்றுக்கு $8\frac{1}{4}$-விகடிகை விதமாய் ஷை இராசியில் ரவி கடந்து வருவதால் 15௳ பகல் 30-நாழிகைக்கும் அரைத் தேதிக்குள்ள விதமாய்ச் சென்ற விகடிகை $4\frac{1}{2}$ இதை மேற்கண்ட விகடிகை 138-ல் கழித்து வந்த மிச்சம் விகடிகை 134, இதையும் இது முதல் மேஷம் $4\frac{1}{4}$, ரிஷபம் $4\frac{3}{4}$, மிதுனம் $5\frac{1}{4}$, கடகம் $5\frac{1}{2}$, சிம்மம் $5\frac{1}{4}$, இவ்வாறு இராசிகளின் தொகைகளையும ஒன்று சேர்க்க வந்த நாழிகை 27, விநாடி $11\frac{3}{4}$-க்கு மேல் கன்னி லக்கினம் நாழிகை 5-உடன் சேர்க்க வந்த நாழிகை 32, வினடி $11\frac{3}{4}$-வரைக்கும் கன்னி லக்கினம் இதில் குழந்தை ஜனனமான நாழிகை 30-யைக் கழித்துவந்த மிச்ச நாழிகை 2, வினடி $11\frac{3}{4}$-ம் ஷை லக்கினத்தில் செல்லானது போக பாக்கியாம். ஜனனமான நாழிகை கன்னி ராசியி லொட்டினபடியால் கன்னியே ஜன்ம லக்னமாம். இவ்விதமாக ஒவ்வொருவருடைய ஜனன காலத்தை நிதானித்து லக்கினத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

## இலக்கின நிச்சயம்

ஜனனமான தினத்தில் சூரியோதயமுதல் ஜனம நாழிகை வரையில கூட்டிய நாழிகையை 4-ல் பெருக்கி, அதனுடன் மேஷம் முதல் ஜனனமான நாழிகைக்குவரும் இலக்கினம் வரை யெண்ணிவரும் ராசிகளின் கணக்கைச் சேர்த்துக்கொண்டு. அந்த

இலக்கினம். சரராசியாக இருந்தால் முன் கூட்டிய இரண்டு தொகையுடன் 5-சேர்த்தும், ஸ்திரராசியானால் 10-சேர்த்தும், உபயராசியானால் 15-சேர்த்தும், வந்த மொத்தக் கணக்கை 27-பேருக்குக் கொடுத்து வந்த மீதியைப் பூர்வபக்ஷமானால் அசுவனி முதலாகவும், அமரபக்ஷமானால் சித்திரை முதலாகவும் கணக்கிட்டு வந்தால் அந்தக் கணக்கு எந்த நக்ஷத்திரம் வருகிறதோ அது ஜன்ம நக்ஷத்திரமாகவாவது, அல்லது அதற்குத் திரிகோண நட்சத்திரமாவது வரவேண்டும். அப்படி வராவிடில் ¼-½-ஒரு நாழிகை குறைத்துப் பார்க்கச் சரியாகவரும். அதுவே லக்கின நிச்சயமென்று கொள்ளவேண்டியது. அன்றியும் சந்திரன் நின்ற வீட்டுக்குடையவன் இலக்கினத்துக்குக் கேந்திரம் அல்லது திரிகோணத்திலிருக்க வேண்டியது. அல்லது சந்திரனுக்கு 1-ம் ராசிக்குடையவன் சந்திரனுக்கு கேந்திரத்தி லிருக்கவேண்டியது. அல்லது லக்கினத்துக்குக் குளிகதிரிகோணம் வரவேண்டு மென்பதாம். இதனாலும் இலக்கின நிச்சயமறிய வேண்டியது.

திதி - நக்ஷத்திரம் - யோகம்-கரணம்-தியாஜ்யம்-அகஸ் இவைகள் பஞ்சாங்கத்தில் அன்றைய தேதி பிரகாரமும், நவாம்சம், அவாம்சம், திரிதாம்சம், திரேக்காணம், ஓரை, வேளை, காலம், அயனம், ருது, திசாபுத்தி, அந்தரம் பலாபலன் அறியவேண்டியது.

துவாதச பாவக பலா பலன்களும் இன்னும் ஜோதிடத்துக்கு ஆவசியமாகிய அரிய பெரிய ரகஸ்ய விஷயங்களெல்லாம் இதன் 5-ம் பாகத்தில் தெளிவாய்க் காணலாம்.



## ஜனன நக்ஷத்திர கர்ப்பசெல்லுபோக இருப்பு மகாதிசை புத்தியறிய

ஜனனகால நட்சத்திரத்தின் பாக்கி நாழிகையை அந்த தசாதிபன் வருஷத்தொகையால் பெருக்கி அந்த நக்ஷத்திர ஆத்யந்த பரம நாழிகையால் வகுத்துவரும் ஈவு வருஷமும் பாக்கியை 12-ஆல் பெருக்கி அதைப் பரம நாழிகையால் வகுத்துவரும் ஈவு மாதமும், பாக்கியை 30-ஆல் பெருக்கி அதைப் பரம நாழிகையால் வகுத்து வந்த ஈவு நாளும் பாக்கியை 60-ஆல பெருக்கிப் பரம நாழிகையால் வகுத்து வரும் ஈவு நாழிகை. இதுபோல விநாடிக்கும் தற்பரைக்கும் காண்க. ஒவ்வொரு கிரகத்தின் திசையில் அந்தக் கிரக முதலிய நவக்கிரகங்களும் பலனைப் பகுத்துண்ண வந்திருக்கும் உட்பிரிவுகளாவன:— ஒவ்வொரு திசைக்கும் ஒன்பது புத்திகளென்றும், புத்தி ஒன்றுக்கு 9-அந்தர மென்றும் அந்தரம் 1-க்கு 9-சூட்சுமாந்திர மென்றும், சூட்சுமாந்திரம் 1-க்கு 9-பிராண பிரிவுகளென்றும் வரும், புத்திக்கு அபகார மென்றும் அந்தரத்துக்குச் சித்திர மென்றும் பெயர்.

ஆயுள் விவரம்—இலக்கினாதிபதி அஷ்டமாதிபதி தசமாதிபதி இம்மூவரும் பலன் பெற்றிருந்தால், நவக்கிரக திசா ௵ 120 ஆகிய உத்தம வயதும் இருவர் பலன் பெற்றிருந்தால் அதில்பாதி 60 ஆகிய மத்திம வயதும் ஒருவர் பலம் பெற்றிருந்தால் அதில் பாதி 32 ஆகிய அதம வயதும்; மூவரும் பலயீனராகில் 12-க்குள்ளே அதமாதம வயதுமாகும். இலக்கினாதிபதி சரராசியிலிருக்க அஷ்டமாதிபதியும் சரராசியிலிருந்தால் தீர்க்காயுசு, இலக்கினாதிபதி சரராசியிலிருக்க அஷ்டமாதிபதி ஸ்திரராசியிலிருந்தால் மத்திம ஆயுசு, இலக்கினாதிபதி சரராசியிலிருக்க அஷ்டமாதிபதி உபயராசியிலிருந்தால் அற்பாயுசு, இலக்

கினதிபதி ஸ்திரராசியிலிருக்க அஷ்டமாதிபதி உபய ராசியிலிருந்தால் தீர்க்காயுசு, இலக்கினதிபதி ஸ்திர ராசியிலிருக்க அஷ்டமாதிபதி சரராசியிலிருந்தால் மத்திமாயுசு, இலக்கினதிபதி ஸ்திரராசியிலிருக்க அஷ்டமாதிபதி ஸதிரராசியிலிருந்தால் அற்பாயுசு.

இலக்கினதிபதி உபயராசியிலிருக்க அஷ்டமாதிபதி ஸ்திரராசியிலிருந்தால் தீர்க்காயுசு இலக்கினதிபதி உபயராசியிலிருக்க அஷ்டமாதிபதி உபயராசியிலிருந்சால் மத்திபமாயுசு. இலக்கினதிபதி உபயராசியிலிருக்க அஷ்டமாதிபதி சரராசியிலிருந்தால அற்பாயுசு இலக்கினதிபதி பலவானயிருக்க 6-8-12 இந்த இடங்களில் பாபக்கிரகங்களிருக்க திரிகோணங்களில் சுபர்களிருக்க தீர்க்காயுசு. இலக்கினதிபதி திரிகோண கேந்திரகளிலிருக்க மித்துரு கிரகங்கள் பார்க்க, ஆயுசுகாரனுகிய சனி பலக்க ஆயுசுவிருத்தி.

அரிஷ்ட தோஷங்கள் :—(1) இலக்கினத்தில் சனியும் 4-மிடத்தில செவ்வாயும் 7-மிடத்தில் சூரியனும் இருந்தாலும், (2) இலக்கினத்தில் இராகு கேதுக்களும் 4-ல் செவ்வாயும் 7-ல சூரியனும் இருந்தாலும் (3) இலக்கினத்தில் அல்லது 7-8-12 மிடங்களிலாவது அமரபட்சத்து சந்திரன் பாவிகளுடன் கூடி நின்ருலும், (4) இலக்கினத்துக்கு 7-மிடத்தில் அங்காரகனும் 8-மிடத்தில் சூரியனும் இருந்தாலும், (5) இலக்கினத்தில் சூரியன் சனி கூடியிருக்க அங்காரகன் பார்த்தாலும், (6) இலக்கினத்துக்கு 7-மிடத்தில் செவ்வாய், சுக்கிரன், சனி இருந்தாலும். (7) இலக்கினத்துக்கு 7-8-மிடங்களில் செவ்வாய் சனி யிருந்தாலும், (8) இலக்கினத்துக்கு 4-மிடத்தில் செவ்வாயும் 8-மிடத்தில் இராகுவும், 12-மிடத்தில் சனியும் இருந்தாலும் (9) இலக்கினத்துக்கு 8-9-12 மிடங்களில் சூரியன் க்ஷீண சந்திரன் செவ்வாய் சனி யிருந்தாலும், (10) இலக்கினத்துக்கு 4-8 மிடங்களில் பாபக்கிரகங்களிருந்தா



லும் (11) இலக்கினத்துக்கு 5-8-9-12 மிடங்களில் சூரியன் அமரபட்சத்துச் சந்திரன இவர்கள் அந்த இராசிகளில் கூடியாவது தனித்தனியாகவாவது இருந்தாலும், (12) இலக்கினத்துக்கு 6-7-8-12 மிடங்களில் க்ஷீண சந்திரன் பாவர்களுடன் கூடியிருந்தாலும், (13) இலக்கினத்துக்கு 5-ல் 10-ல் சனியிருந்தாலும் சிசுவுக்கு அரிஷ்டம்.

(1) இலக்கினத்துக்கு 6-மிடத்தில் சந்திரனும் அதற்கு 7-மிடத்தில் செவ்வாய் சனி இருந்தாலும் (2) இலக்கினத்தல் சந்திரனும அதற்கு4-7-8 மிடங்களில் பாவிகளும் இருந்தாலும (3) இலக்கினத்துக்கு இருபுறமும் பாவிகளிருந்தாலும் தாய்க்கும் சிசுவுக்கும் அரிஷ்டம்.

இலக்கினத்துக்கு 6-மிடத்தில் சூரியன் இருக்க அதற்கு 7-மிடத்தில் செவ்வாய் சனி இருக்க பிதாவுக்கும் சிசுவுக்கும் அரிஷ்டம்.

(1) இலக்கினத்துக்கு 5-அல்லது 10-மிடத்தில் சந்திரன் இருந்தாலும், (2) சந்திரனின்ற இராசிக்கு 7-மிடத்தில் செவ்வாய் அல்லது சனி இருந்தாலும் தாய்க்கு அரிஷ்டம்.

(1) இலக்கினத்துக்கு 5-அல்லது 10-மிடத்தில் சூரியன் இருந்தாலும், (2) சூரியனின்ற இராசிக்கு 7-மிடத்தில் செவ்வாய் அல்லது சனி இருந்தாலும் பார்த்தாலும் (3) இலக்கினக்துக்கு9-மிடத்தில் இராகு கேதுக்களிருந்தாலும், (4) இலக்கினத்துக்கு 9-11 மிடத்தில் சனி செவ்வா யிருந்தாலும் பிதாவுக்கு அரிஷ்டம், இலக்கினத்துக்கு 3-மிடத்தில் செவ்வா யிருக்க சகோதர அரிஷ்டம், இலக்கினத்துக்கு 5-அல்

லது 10 மிடத்தில் செவ்வாயிருக்க அம்மானுக்கு அரிஷ்டம் அன்றியும் சந்திரலக்கினத்திலும் ஜனன லக்கினத்திலும் அசுப கிரகங்க ளிருந்தாலும் சிசுவுக்கு அரிஷ்டம் மேற்கண்ட அரிஷ்ட தோஷங்கள் சுபக்கிரகம் இருக்க பார்க்க நீங்கும்.

அரிஷ்டபாகம்5-க்கு விவரம்: 1-வயது முதல் 12 வயது வரையில் பாலாரிஷ்டம் 13-வயது முதல் 20 வயது வரையில் யௌவன அரிஷ்டம், 21-வயதுமுதல் 32-வயது வரையில கௌமார அரிஷ்டம், 33-வயது முதல் 70-வயது வரையில் விருத்தாரிஷ்டம், 71-வயது முதல் 120-வயது வரையில் பூர்ண ஆயுசு.

உத்தம, மத்திம, அற்ப, ஆயுசுக்கு விபரம்: 1-வயது முதல் 32-வயது வரையில் அற்பாயுசு, 33-வயது முதல் 60-வயது வரையில் மத்திபமாயுசு, 61-வயது முதல் 120-வயது வரையில் உத்தமம் அல்லது தீர்க்காயுசு.

---

உ

ஓம் நவக்கிரக பரப்பிரஹ்மணே நமஃ

# பிரமரகசிய
# சோதிட அரிச்சுவடி

### நான்காம் பாகம்

---

## பாலாரிஷ்டம்

ஜனனகாலத்தில் சனி அங்காரகாம்சத்தில் இருந்து அங்காரகனல் பார்க்கப்பட்டாலும், அல்லது ராகுவினல் பார்க்கப்பட்டாலும் அந்த சிசு ஒரு வருஷம ஜீவித்திருக்கும்.

சனி சுக்கிராம்சத்திலிருந்து சுக்கிரனல் பார்க்கப்பட்டாலும் அல்லது கேதுவினல் பார்க்கப்பட்டாலும் சனி புதாம்சத்திலிருந்து புதனல் பார்க்கப்பட்டாலும், அல்லது சூரியனல் பார்க்கப்பட்டாலும் மூன்று வருஷம் வரையில் ஜீவித்திருக்கும்.

சனி சூரியாம்சத்திலிருந்து சூரியனல் பார்க்கப்பட்டாலும் அல்லது சுக்கிரனல் பார்க்கப்பட்டாலும் நான்கு வருஷம் ஜீவித்திருக்கும்.

சனி சந்திராம்சத்திலிருந்து சந்திரனல் பார்க்கப்பட்டாலும் அல்லது தேஹாதிபதியால் பார்க்கப்பட்டாலும் எட்டு வருஷங்களுக்குமேல் ஜீவித்திருக்காது.

சனி குருவினுடைய அம்சத்திலிருந்து குருவினல் பார்க்கப்பட்டாலும் அல்லது சந்திரனல் பார்க்கப்பட்டாலும் நான்கு வருஷங்கள் வரையில் ஜீவித்திருக்கும்.

நான்காவது இடத்தில் ராகு இருந்து பாபகிரகங்களால் பார்க்கப்பட்டால் பதினாறு வருஷம் வரையில் ஜீவித்திருக்கும்.

பன்னிரண்டில் சனி ஏழில் க்ஷீண சந்திரன் இருந்தால் உடனே தகப்பனுக்கு அரிஷ்டமுண்டாகும். சுபகிரகங்கள் பார்த்தால் மூன்று வருஷங்களுக்குமேல் அரிஷ்ட முண்டாகும்.

ஜனனகாலத்தில் சூரியன், சந்திரன், சனி, ஐந்து, ஏழு, பன்னிரண்டு இந்த இடங்களில் இருந்தாரானால் தாய்க்கும், தகப்பனுக்கும், சிசுவுக்கும் கண்டம்.

ஜன்மலக்கினத்திற்கு எட்டாவது வீட்டில் சூரியாதி எந்தக் கிரகங்களிருந்தாலும் குழந்தைக்கு அரிஷ்டம், குஜனிருந்தால், தாயாருடைய சகோதரர்களுக்கு அரிஷ்டம். ஜன்மலக்கினத்தில் அங்காரகன ஏழாவது வீட்டில் ரவி, சனி இவர்கள் சேர்ந்திருந்தால், குழந்தை பிறந்தவுடனே காலமாய்விடும்.

சுபக்கிரகங்கள் கேந்திரத்திலிருந்து அங்காரகன் சூரியன், சனி இவர்களைப் பார்த்தால் குற்றமில்லை

சந்திரன், விஷமராசியை அடைந்தாலும், விஷமாம்சத்தை அடைந்தாலும், குழந்தைகாலமாய்விடும்.

ஜனனவேளையில் பன்னிரண்டாவது ஸ்தானத்தில் சந்திரன், லக்கினத்தில் சனி இருந்தாலும், லக்கினத்தில், அஷ்டமத்தில், விரையஸ்தானத்தில், பன்னிரண்டில் அங்காரகன் இருந்தாலும் குழந்தை காலமாய் விடும்.

விலக்கு வியாழனுடைய (குரு) பார்வையிருந்தால் குற்றமில்லை சுபம்.



ஜன்மலக்கினத்திற்கு எட்டாவது ஸ்தானத்தில் சந்திரனிருந்தாலும்; லக்கினம், சந்திரன எட்டாம் இடம் இந்த மூன்று இடங்களைப் பாபகிரகங்கள் பார்த்தாலும்; குழந்தை காலமாய்விடும.

லக்கினம் ஏழாம் இடம் இந்த இரண்டில் பாபகிரகங்கள் ஆறாமிடம் எட்டாமிடம் இந்த இடங்களில் சந்திரன் இவ்விதமாக இருந்தால், ஜனனமான உடனே குழந்தை காலமாய்விடும்,

பத்தாவது இடத்தில் பாபக் கிரகங்களிருந்தால், குழந்தைக்கு அரிஷ்டம. பாபககிரகஙகள் கேந்திர திரிகோணங்களில் சுக்கிரன் ஆறாமிடம், எட்டாமிடம், பன்னிரண்டா மிடஙகளிலிருக்க சூரிய உதய வேளையில் பிறந்த குழந்தை காலமாய்விடும.

லக்கினாதிபதி, அம்சாதிபதி இவர்கள் அஸ்தகதமான போது பிறந்த குழந்தை காலமாய்விடும.

லக்கினாதிபதி, திரிகோணாதிபதி, அம்சாதிபதி, இவர்கள் சத்துரு இடங்களில இருந்தாலும் அலலது எட்டாம் இடத்தில் இருந்தாலும பிறநதகுழந்தை காலமாய்விடும்.

லக்கினத்தில் சந்திரன், பன்னிரண்டாவது ஸ்தானத்தில் ரவி, ஒன்பதாவது ஸ்தானத்தில சனி, எட்டாவது ஸ்தானத்தில குஜன இருககும்போது பிறந்த குழந்தையும், பிதாவும உடனே காலமாய் விடுவார்களை.

லக்கினத்திலாவது பன்னிரண்டாவது ஒன்பதாவது எட்டாவது இடஙகளில சூரியன், அஙகாரகன இருவர் சேர்நதாவது தனித்தனியாக இருக்கும் போதாவது குழநதை பிறந்தால பிதா காலமாய் விடுவார்.

கேது நான்காவது இடத்திலிருந்து பாபக் கிரகங்களால் பார்க்கப்பட்டாலும் அல்லது ஐந்தாவது இடம், ஒன்பதாவது இடம் பாபகிரகங்கள் பார்த்தாலும் அப்போது குழந்தை பிறந்தால் தகப்பனுக்கு அரிஷ்டம்.

ஐந்து, ஒன்பதாவது இடங்களில் ராகு இருந்து பாபகிரகங்களால் பார்க்கப்பட்டால் தகப்பன் வம்சத்தில் சேர்ந்தவர்களுக்கு மூன்று நாளில் அரிஷ்டமுண்டாகும்.

ஏழாவது இடத்தில் அங்காரகனிருந்து அங்காரகனை சனி நீசராசியில் வக்கிரமடைந்து பார்த்தாலும் பிதா அன்னிய நாட்டில் உடனே காலமாய் விடுவார்.

சனி வக்கிரித்து நீசராசியிலிருக்காமல் ஏழாவது இடத்தில் குஜனைப் பார்த்தால், சனிக்கு வக்கிரம் போனவுடனே தகப்பனுக்கு அரிஷ்ட மேற்படும்.

லக்கினத்தில் பாபக் கிரகங்கள், கொடூர கிரகங்கள் இருந்து சுபகிரக சம்பந்த வீக்ஷிணங்கள் அடையாமல் இருக்கும்போது சனி பார்த்தாலும், கேந்திரத்தில் குரு இல்லாமலிருந்தாலும், பிதாவுக்கு அரிஷ்டம்.

சூரியன், அங்காரகன், சனி இவர்கள் எட்டாவது இடத்தை அடைந்து சுபக்கிரகங்களால் பார்க்கப்படாமல் போனால் பிதாவுக்கு அரிஷ்டம்.

சூரியன், சந்திரன், சனி, ஐந்தாமிடம், ஏழாமிடம், பன்னிரண்டாமிடங்களில் கலந்தாவது அல்லது தனியாகவாவது இருக்கும் காலத்தில் ஆண் குழந்தை பிறந்தால் பிதாவுக்கும் பெண் குழந்தை பிறந்தால் மாதாவுக்கும் அரிஷ்டம்.



ஜன்ம லக்கினத்தில் சூரியன், சந்திரன், ஏழாம் ஸ்தானத்தில் அங்காரகனிருந்து லக்கினம், ஏழாமிடம், இவைகளைப் பாபக்கிரகங்கள் பார்த்தால், கேந்திர திரிகோணங்களில் சுபகிரகங்கள் இல்லாமலிருந்தாலும் குழந்தையினுடைய மாதா ஏழுநாளில் காலமாவாள்.

லக்கினத்தில், பத்தாம் ஸ்தானத்தில் சூரியன், சந்திரன், சனி மூவர் கூடியிருந்து குரு பார்வையில்லாமலிருந்தால், தாயாருக்கும் தகப்பனுக்கும் குழந்தை மூவருக்கும் அரிஷ்டம்.

சந்திரனிருக்கும் லக்கினத்திற்கு ஐந்தாமிடத்தில் அங்காரகனிருந்து குரு பார்வையில்லாமலிருந்தால் தாயாருடைய சகோதரர்களுக்கு அரிஷ்டம் தவறாது. ஐந்தாம் ஸ்தானத்தில் ரவியிருந்தால் பிதாவுக்கு, சந்திரனிருந்தால் மாதாவுக்கு, அங்காரகனிருந்தால் சகோதரர்களுக்கு, உடன் பிறந்தவர்களுக்கு, புதனிருந்தால் தாயாருடைய சகோதரர்களுக்கு, குருவிருந்தால் தாயாருடைய தாய்க்கு, சுக்கிரனிருந்தால் தாயாருடைய தகப்பனுக்கு, சனி இருந்தால் குழந்தைக்கு அரிஷ்ட மேற்படும்.

## நக்ஷத்திர கண்டங்கள்

திதி நக்ஷத்திர கண்டங்கள் மாதா பிதாவுக்கு அரிஷ்டம் லக்கின கண்டம் குழந்தைக்கு அரிஷ்டம் திதி நக்ஷத்திர லக்கின கண்டங்கள் சேர்ந்திருந்தால் தாய், தகப்பன் குழந்தை மூவருக்கும் அரிஷ்டம்.

லக்கினத்தில் குருவிருந்தால் திதி நக்ஷத்திர லக்கின கண்டங்கள் சேர்ந்திருந்தாலும் தோஷமில்லை.

அசுவனி முதல் பாதத்தில் பிறந்தால் தகப்பனுக்கு மூன்று மாதம்வரை கண்டம் பரணி மூன்றும்

பாதத்தில் பிறந்தால் குழந்தைக்கு இருபத்தி ஏழு நாள் வரையில் தோஷம். ரோகணி நக்ஷத்திர முதல் பாதத்தில் ஆண் குழந்தை பிறந்தால் தாயாருடைய சகோதரர்களுக்கும இரண்டாம் பாதத்தில் பிறந்தால் மாதாவுக்கு தோஷம், நான்காவது பாதத்தில் பிறந்தால் தோஷமில்லை, க்ஷேம முண்டாகும்.

புஷ்யமி நக்ஷத்திரம் கர்க்கடக லக்கினத்தில் பகலில் பிள்ளை பிறந்தால், தகப்பனுக்குக் கண்டம். புஷ்மமி நக்ஷத்திரம் கர்க்கடக லக்கினத்தில் ராத்திரியில பெண் பிறந்தால், தாயாருடைய சகோதரனுக்கு தோஷம. இரண்டாவது பாதம் மத்திய பாகத்தில் பிறந்தால், மூன்றுமாதம் வரையில் தாய் தகப்பனுக்கு கண்டம்.

ஆஸ்லேஷ நக்ஷத்திரம் பிரதம பாதத்தில் பிறந்தால் சுபம், இரண்டாம் பாதத்தில் பிறந்தால் குழந்தைக்கு கண்டம். மூன்ரும் பாதத்தில் தாயாருக்கு கண்டம், நான்காவது பாதத்தில் பிறந்தால் தகப்பனுக்கு கண்டம். இந்த கண்டதோஷம் மூன்றுமாதம் வரையிலு மிருக்கும்.

ஆஸ்லேஷா நக்ஷத்திர அந்தத்தில் இரண்டு நாழிகை மக நக்ஷத்திரத்தின் முதலில் இரண்டு நாழிகை ஜேஷ்டா நக்ஷத்திரத்தின் அந்தத்தில் இரண்டு நாழிகை மூல நக்ஷத்திரத்தின் பிரதமத்தில் இரண்டு நாழிகை ரேவதி நக்ஷத்திரத்தின் கடைசியில் இரண்டு நாழிகை அஸ்வனி நட்சத்திரத்தல் இரண்டு நாழிகை இவை தோஷ கடிகை ஆகையால் இந்த நாழிகையில் ஜனன மானவர்களுக்கு நவக்கிரஹ சாந்தி செய்தால் உத்தமம்



மக நக்ஷத்திரத்தின் பிரதம பாதத்தில் பிறந்தால் ஐந்து மாதம் வரையில் தகப்பனுக்குத் தோஷம். மற்ற இரண்டாம் பாதம். மூன்ரும் பாதம், நான்காம் பாதங்களில் பிறந்தால் சுபம்.

உத்திர நக்ஷத்திரம் பிரதம பாதத்திலும், நான்காவது பாதத்திலும் பிறந்தால் தாய், தகப்பன், உடன் பிறந்தவர்களுக்கு இரண்டு மாதம் வரையில் தோஷம். நவக்கிரக பூஜை எள்ளு தானத்தால் தோஷம் நீங்கும். மற்ற இரண்டு மூன்ருவது பாதங்கள் சுபம்.

இந்த நக்ஷத்திரத்தின் பிரதம பாதத்திலும், இரண்டாம் பாதத்திலும், மூன்ரும் பாதத்திலும் பிறந்தால் தாய் தகப்பன், உடன் பிறந்தவர்களுககு ஆறுமாதம் வரையில் தோஷம்.

ஜ்யேஷ்டா நக்ஷத்திரத்தின் ஆதிஅந்த நாழிகையைப் பத்துப் பங்காக்கி அதில் பிரதம பாதத்தில் பிறந்தால் தாயாருடைய தயாருக்கு தோஷம் இரண்டாம் பாதத்தில் பிறந்தால் தாயாருடைய தகப்பனுக்கு தோஷம். மூன்ரும் பாதத்திலானல் தாயார் உடன் பிறந்தவர்களுக்கு தோஷம் நான்காம் பாதத்தில் பிறந்தால் தனக்குமுன் பிறந்தவர்களுக்குத் தோஷம். ஐந்தாம் பாதத்தில் பிறந்தால் பிறந்த குழந்தைக்கு க்ஷேமம். ஆரும பாதத்தில் பிறந்தால் ஒருவருக்கும் தோஷமில்லை ஏழாம் பாகத்தில் பிறந்தால் தாய்வர்க்கத்தாருக்கு தோஷம் எட்டாவது பாதத்தில் பிறந்தால் பிறந்த குழந்தைக்குக் கண்டம். ஒன்பதாவது பாதத்தில் பிறந்தால் பிதாவுக்கு தோஷம். பத்தாம் பாதத்திலானல் தாயாருக்குத் தோஷம். ஜ்யேஷ்டா நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் பிறந்தால் பிதாவுக்கு ஒன்பது மாதம் வரையில தோஷம்.

ஜ்யேஷ்டா நட்சத்திரத்தின் அந்தத்தில் கால் நாழிகை மூலநக்ஷத்திரத்தின் பிரதமத்தில் கால் நாழிகை மொத்தம் அரைநாழிகைக்கு அந்தரானமெனச் சொல்லப்படும் இதில் ஆண்குழந்தை பிறந்தால் குழந்தைக்கு தோஷம் பெண் பிறந்தால் தோஷமில்லை.

மூல நக்ஷத்திரத்தின் ஆதியந்த நாழிகையைப் பன்னிரண்டு பாகமாக்கி அதில பிரதம பாகத்தில் பிறந்தால் தகப்பனுக்குத் தோஷம், இரண்டாவது பாகத்தில் பிறந்தால தாயாருக்குத் தோஷம் மூன்றும பாகத்தில் ஜனனமானல் அண்ணனுக்குத் தோஷம், நாலாவது பாகத்தல் பிறந்தால அக்காளுக்குத் தோஷம், ஐந்தாவது பாகத்தில் பிறந்தால் பெண் கொடுத்த மாமனருக்குத் தோஷம், ஆருவது பாகத்தில் பிறந்தால் சிறிய தகப்பன பெரிய தகப்பனுக்குத் தோஷம், ஏழாவது பாகத்தில் பிறந்தால் தாயாருடைய உடன பிறந்தவர்களுக்குத் தோஷம், எட்டாம பாகத்தில் பிறந்தால் பொருள் விரையம், ஒன்பதாவது பாகத்தில் பிறந்தால் சாப்பாட்டுக்குக் கஷ்டம், பத்தாவது பாகத்தில் பிறந்தால் வறுமை, பதினொவது பாகத்தில் பிறந்தால் வேலைக்காரர்களுக்குத் தோஷம், பன்னிரண்டாவது பாகத்தில் பிறந்தால் பிறந்த குழந்தைக்கு தோஷம் மூன்று மாதம வரையில்

மூல நக்ஷத்திரத்தின் முதல்பாதத்தில் பிறந்தால் பிதாவுக்குக் கண்டம், இரண்டாம பாதத்தில் பிறந்தால் மாதாவுக்குக் கண்டம், மூன்றும் பாதத்தில் பிறந்தால பொருள் விரையம் நான்காவது பாதத்தில் பிறந்தால் நலம்.



பூர்வாஷாடா நக்ஷத்திரம் தனுர் லக்கினத்தில் கூடிய தினத்தில் பகலில் ஆண்குழந்தை பிறந்தால் தகப்பனுக்குக் கண்டம். பூர்வாஷாடா தனுர் லக்கினத்திலும் புஷ்யமி நக்ஷத்திரம் கற்கடக லக்கினத்திலும் சூரியோதய வேளை சூரியாஸ்தமயவேளையிலும் நடுராத்திரியிலும் ஆண்குழந்தை பிறந்தால பிறந்த குழந்தைக்கு தோஷம் பூர்வாஷாடா தனுர்லக்கினத்தில புஷ்யம கடக லக்கினத்திலாவது குழந்தை பிறந்தால் பிதாவுக்கு அரிஷ்டம்.

ரேவதி நக்ஷத்திரம் நான்காம் பாகத்தில் பிறந்தால் மூன்று மாதம் வரையில் தகப்பனுக்குக்கண்டம்

## அரிஷ்டபங்க யோகங்கள்

பூர்வோக்தாரிஷ்ட யோகங்களில் பிறந்த குழந்தைகளுக்கு லக்கினதிபதி பலவானக இருந்தாலும், கேந்திரங்களிலாவது மூல திரிகோணங்களிலாவது இருந்தாலும் குற்றமில்லை. பிறந்த குழந்தைகள் பிழைத்திருக்கும். பூர்வோக்தாரிஷ்ட யோகங்கள் தீங்குசெய்யா.

ஒரு சுபகிரகம் எல்லாபலமும் உடையதாக கேந்திர திரிகோணங்கள் அடைந்திருந்தால் மற்றக் கிரகங்களினல் ஏற்படும் தோஷங்களை நிவர்த்திசெய்து பிறந்த குழந்தைக்குப் பூர்ணபுஷ்டியும் நோயற்ற வாழ்வையும் கொடுக்கும் புதன், சுக்கிரன், குரு, இம்மூவரில் ஒருவர் கேந்திர திரிகோணங்களை அடைந்தால் தற்கால மரண யோகங்கள் நீங்கிவிடும். குரு, சுக்கிரன், புதன் இவர்கள் ஜன்மலக்கினம், பத்தாம் ஸ்தானம், ஐந்தாம் ஸ்தானம், ஒன்பதாம் ஸ்தானம் இவைகளை அடைந்திருந்தால் எத்தனை தோஷங்களிருந்தாலும் குற்றமேயில்லை.

குரு, சுக்கிரன், ராகு இம்மூவரில் யாராவது கேந்திரத்தி லிருந்தால் அந்த ஜாதகருக்கு ஆயுள் நூறுவருடம், சந்திரன் கேந்திரத்திலிருந்தால் பூர்வோக்தாரிஷ்ட தோஷங்கள் நிவர்த்தியாகும்.

கிருஷ்ண பட்சத்தில் நடுப்பகலில் சுக்கிலபட்சத்தில் இராத்திரியிலும் பிறந்து சந்திரன் ஆறாவது ஸ்தானம எட்டாவது ஸ்தானத்திலிருந்து பாபக்கிரகங்களினாலாவது புதனாலாவது பார்க்கப்பட்டால் எவ்விதத் தோஷங்களும் நிவர்த்தியாகும்.

மாரக ஸ்தானம் மாரகாள்

இலக்கினத்துக்கு 8-ம் இடமும் அதற்கு 8-மிடமான 3-ம் இடமும் ஆயுள் தானமென்று பேர். இவைகளுக்கு விரைய ஸ்தானங்களாகிய 7-ம் இடத்தையும் 2-ம் இடத்தையும் ஜாதகர்களுக்கு மாரக ஸ்தானமென்று கொள்ளவேண்டியது.

கேந்திராதி பத்திய தோஷத்தில் குருவும் சுக்கிரனும் மிகவும் பலவான்கள். இவர்கள் ஷை 2-7-ம் இடங்களில் நின்றாராகில், மாரகத்தைக் கொடுப்பார்கள்.

மாரக ஸ்தானாதிபதியைப் பார்க்கிலும் மாரக ஸ்தானத்தி லிருப்பவர்கள் பலவான்களெனக் காண்க. இது மாரக ஸ்தான விலக்கின்மேல் கேந்திராதிபத்திய தோஷத்தாற் சொல்லப்படுகிறது.

இலக்கினம் சரராசியானால் 2-7-க்கு அதிபர்கள் மாரகாள் ஸ்திர ராசியானால் 3-8-க்கு அதிபர்கள் மாரகாள் உபயராசியானால் 7-11-க்கு அதிபர்கள் மாரகாள்.



இலக்கினத்துக்கு 12-ம் இடத்தாதி பத்தியம் சுக்கிரனுக்காவது சனிக்காவது இருந்தால் ஜாதகருக்கு மாரகம். ஷை 7-மிடத்தாதி பத்தியம் சூரியனுக்கு இருந்தால் ஜாதகனுக்கு மாரகம். ஷை 6-மிடத்தாதி பத்தியம் அங்காரகனுக்கிருந்தால் ஜாதகருக்கு மாரகம். ஷை 2-ம் இராகுவும் 8-ல் கேதுவுமிருந்தால் மாரகம். ஷை 8-ல் இராகு இருந்தால் பிதுர் மாரகம். ஷை 4-1-5 மாதுரு மாரகம். ஷை 5-11-சகோதர மாரகம். ஷை 6-மிடத்தாதி பத்தியம் சூரியனுக்கிருந்தால் பிதுர் மாரகம். இலக்கினத்துக்கு 2-7-க்கதிபர்கள் உச்சம் சொட்சேத்திர கேந்திரம் திரிகோணம் இந்த இராசிகளிலிருந்தாலும், மித்திராளுடன் சம்பந்தப்பட்டாலும், சுபக்கிரகங்களுடன் சேர்ந்தாலும், பார்க்கப்பட்டாலும் நல்ல பலன்களையும் 2-3-7-8-12 மிடங்களில் இருந்தாலும், சத்துரு, பாபி இவர்களுடன் சம்பந்தப்பட்டாலும், பார்க்கப்பட்டாலும் கண்டத்துக்குச் சமானமாகிய மிகவும் கஷ்ட பலன்களையுங் கொடுப்பார்கள்.

இலக்கினத்துக்கு 3-8-க்கதிபர்கள் தங்களுடைய திசைகளில் மாரகத்துக் கொப்பாகிய கண்டத்தையும் மிகவும் கஷ்டபலன்களையும் கொடுப்பார்கள் அவர்கள் 2-3-7-8-12-மிடங்களி லிருந்தால் மாரகத்தைக் கொடுப்பார்கள் சுபர்களுடன் சம்பந்தப்பட்டாலும் பார்க்கப்பட்டாலும் மத்திம பலனைக்கொடுப்பார்கள்.

மாரக ஸ்தானாதிபர்கள் மாரக ஸ்தானாதிபர்களுடன் சேர்ந்தாலும் பார்க்கப்பட்டாலும் மாரகத்தைக் கொடுக்க மாட்டார்கள் ஆனால் அவர்களுடன் சேர்ந்த பாபக் கிரகங்கள் அல்லது மாரக ஸ்தானத்திலிருக்கிற பாபிகள் மாரகத்தைக் கொடுப்பார்கள்

தீர்க்காயுசு—ஜாதகனுக்கு 7-9-ம் திசை மாரகம், மத்திம ஆயுசு ஜாதகருக்கு 3-5-6-ம் திசைகள் மாரகம் அற்பாயுசு ஜாதகருக்கு 1-3-ம் திசைகள் மாரகம்.

4-வது திசை சனி திசையானுல் மாரகம், 5-வது திசை செவ்வாய் திசையானுல் மாரகம், 6-வது திசை குரு திசையானுல் மாரகம், 7-வது திசை இராகு திசையானுல் மாரகம்.

சந்திரன் நின்ற இராசிக்கு 4-10-மிடங்களி லிருக்கும் பாபர் திசைகளும் மாரகம, குளிகன் நின்ற இராசிக்குத் திரிகோணத்தில் சனிவரும் காலம் மாரகம். இரண்டாமிடத்தில் பாபக்கிரகங்க ளிருக்க அல்லது பார்க்க இலக்கினுதிபதியும் குருவும் பாபக் கிரகங்களும் ஒரே இராசியிலிருக்க எட்டில் இராகுவிருக்க விஷத்தினுல் பீடை.

மாரக திசாபுத்தி விபரம்

இலக்கினுதிபதியுடைய திசையில் சப்தமாதிபதி புக்தி சப்தமாதிபதியுடைய திசையில் இலக்கினுதிபதி புக்தியில் மாரகம்.

இலக்கினத்தி லிருக்கிறவன் திசையில் சப்தம ஸ்தானத்திலிருக்கிறவன் புக்தி. சப்தமஸ்தானத்தி லிருக்கிறவன் திசையில் இலக்கினத்தி லிருக்கிறவன் புக்தி, இலக்கினுதிபதியுடன் சம்பந்தப்பட்டவன் திசையில் சப்தமாதிபதியுடன் சம்பந்தப்பட்டவன் புக்தி. சப்தமாதிபதியுடன் சம்பந்தப்பட்டவன் திசையில் இலக்கினுதிபதியுடன் சம்பந்தப்பட்டவன் புக்தி மாரகம்.

இலக்கினுதிபதி பார்வை சம்பந்தப்பட்டவன் திசையில் சப்தமாதிபதி பார்வை சம்பந்தப்பட்டவன்



புக்தி சப்தமாதிபதி பார்வை சம்பந்தப்பட்டவன் திசையில் இலக்கினுதிபதி பார்வை சம்பந்தப்பட்டவன் திசையில் இலக்கினுதிபதி பார்வை சம்பந்தப்பட்டவன் புக்தி மாரகம்.

துதியாதிபதியினுடைய திசையில் விரயாதி பதியினுடைய புக்தி விரயாதிபதியினுடைய திசையில் துதியாதிபதியினுடைய புக்தி. துதிய ஸ்தானத்தி லிருக்கிறவன் திசையில், விரய ஸ்தானத்தி லிருக்கிற வன் புக்தி. விரய ஸ்தானத்திலிருக்கிறவன் திசையில் துதிய ஸ்தானத்திலிருக்கிறவன புக்தி. துதியாதி பதியோடு சம்பந்தப்பட்டவன் திசையில் விரயாதிபதி யோடு சம்பந்தப்பட்டவன் புக்தி, விரயாதி பதியோடு சம்பந்தப்பட்டவன் திசையில துதியாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் புக்தி, துதியாதிபதியுடன் பார்வை சம்பந்தப்பட்டவன் திசையில் விரயாதிபதி யின் பார்வை சம்பந்தப்பட்டவன் புக்தி விரயாதி பதியின் பார்வை சம்பந்தப்பட்டவன் திசையில் துதியாதிபதியின் பார்வை சம்பந்தப்பட்டவன் புக்தி மாரகம்.

திரியாதிபதியினுடைய திசையில் லாபாதிபதி யினுடைய புக்தி. லாபாதிபதியினுடைய திசையில் திரிதியாதிபதியினுடைய புக்தி திரிதய ஸ்தானத்தி லிருக்கிறவன் திசையில் லாபஸ்தானத்திலிருக்கிற வன் புக்தி. லாபஸ்தானத்தி லிருக்கிறவன் திசையில் திரிதிய ஸ்தானத்தி லிருக்கிறவன் புக்தி. திரிதியாதி பதியோடு சம்பந்தப்பட்டவன் திசையில் லாபாதிபதி யோடு சம்பந்தப்பட்டவன் புக்தி லாபாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் திசையில் திரிதியாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் புக்தி. திரிதியாதிபதியினது பார்வை பெற்றவன் திசையில் லாபாதிபதியினது பார்வை பெற்றவன் புக்தி. லாபாதிபதியினது

பார்வை சம்பந்தப்பட்டவன் திசையில் திரிதியாதிபதியினது பார்வை சம்பந்தப்பட்டவன் புக்தி மாரகம்.

சதுர்த்த ஸ்தானாதிபதியினுடைய திசையில் தசமாதிபதியினுடைய புக்தி தசமாதிபதியினுடைய திசையில் சதுர்த்த ஸ்தானாதிபதியினுடைய புக்தி, சதுர்த்த ஸ்தானத்தி லிருக்கிறவனுடைய திசையில் தசம ஸ்தானத்தி லிருக்கிறவனுடைய புக்தி, தசம ஸ்தானத்தி லிருக்கிறவனுடைய திசையில் சதுர்த்த ஸ்தானத்தி லிருக்கிறவனுடைய புக்தி, சதுர்த்த ஸ்தானாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் திசையில் தசமாதிபதியோடு சம்பந்தப்பட்டவன்புக்தி. தசமாதிபதியோடு சம்பந்தப்பட்டவனது திசையில் சதுர்த்த ஸ்தானாதிபதியோடு சம்பந்தப்பட்டவனது புக்தி, சதுர்த்த ஸ்தானாதிபதியினது பார்வை பெற்றவன் திசையில் தசமாதிபதியினது பார்வைபெற்றவனது புக்தி. தசமாதிபதியினது பார்வை பெற்றவனது திசையில் சதுர்த்த ஸ்தானாதிபதியினது பார்வை பெற்றவனது புக்தி மாரகம்.

பஞ்சம ஸ்தானாதிபதியினது திசையில் பாக்கியாதிபதியினது புக்தி பாக்கியாதிபதியினுடைய திசையில் பஞ்சம ஸ்தானாதிபதியினுடைய புக்தி பஞ்சம ஸ்தானத்தி லிருக்கிறவன் திசையில் பாக்கிய ஸ்தானத்தி லிருக்கிறவன் புக்தி. பாக்கிய ஸ்தானத்தி லிருக்கிறவன் திசையில் பஞ்சம ஸ்தானத்தி லிருக்கிறவன் புக்தி பஞ்சம ஸ்தானாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் திசையில் பாக்கியாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் புக்தி பாக்கிய ஸ்தானாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் திசையில் பஞ்சம ஸ்தானாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் புக்தி பஞ்சம ஸ்தானாதிபதியினால் பார்வை பெற்றவன் திசையில் பாக்கிய ஸ்தானாதிபதியினால் பார்வை பெற்றவன்



புக்தி பாக்கிய ஸ்தானாதிபதியினால் பார்வை பெற்றவன் திசையில் பஞ்சம ஸ்தானாதிபதியினால் பார்வை பெற்றவன் புக்தி மாரகம்.

சஷ்டமாதிபன் திசையில் அஷ்டமாதிபனது புக்தி அஷ்டமாதிபனது திசையில் சஷ்டமாதிபனது புக்தி சஷ்டம ஸ்தானத்தி லிருக்கிறவன் திசையில் அஷ்டம ஸ்தானத்திலிருக்கிறவன் புக்தி அஷ்டம ஸ்தானத்தி லிருக்கிறவன் திசையில் சஷ்டம ஸ்தானத்தி லிருக்கிறவனது புக்தி. சஷ்டமாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் திசையில் அஷ்டமாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் புக்தி. அஷ்டமாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் திசையில் சஷ்டமாதிபதியோடு சம்பந்தப்பட்டவன் புக்தி. சஷ்டமாதிபதியினால் பார்வைபெற்றவன் திசையில் அஷ்டமாதிபதியினால் பார்வை பெற்றவன் புக்தி அஷ்டமாதிபதியினால் பார்வை பெற்றவன் திசையில் சஷ்டமாதிபதியினால் பார்வை பெற்றவன் புக்தி மாரகளாகும்.

### யோகபாக முதலியவை

கேந்திராதிபதியும் திரிகோணாதிபதியும் 3, 6, 8, 11-ம் இடங்களுக்குரிய அதிபதிகளுடன் கூடாமல் தங்கள் தங்கள் சம்பந்தமான வேறோரிடத்திலும் ஆதிபத்திய தோஷமில்லாமல் இருவருங் கூடியிருந்தாலும், ஒருவரை யொருவர் பார்த்தாலும், ஒருவர் வீட்டில் ஒருவ ரிருந்தாலும் சுப பலனைக் கொடுப்பார்கள். பாபிகள் 3-6-8-12-ல் இருந்தாலும் அல்லது பாபிகள் சுபாள் சம்பந்தம் அல்லது பார்வையுடையவர்களாய் 3-6-8-ல் மித்துரு இராசிகளில் அல்லது கேந்திரங்களி லிருந்தாலும் சுப பலனைத் தருவார்கள்.

இராகு கேதுக்கள் கேந்திரத்திலிருந்தால் திரிகோணுதிபதியுடனும், திரிகோணத்தி லிருந்தால் கேந்திராதிபதியுடனும் சம்பந்த முற்ருராகிற் பிரபல யோகத்தைக் கொடுப்பார்கள்.

தருமாதிபதியும் கருமாதிப்பதியும் ஒரே இராசியில் சேர்ந்தாலும், ஒருவரை யொருவர் பார்த்தாலும் தங்கள் இராசிகளில மாற்யிருந்தாலும் மேலான யோக பலனைக் கொடுப்பார்கள்.

பூர்வபட்சத்துச் சந்திரனும் குருவும் 4-ஆம் 10-ஆம் ஆக மீனம இடபம, தனுசு, கும்பம் இந்த இராசிகளிலிருக்கினும் இலக்கினம் மித்துரு ராசிகளில் பூர்வபட்சத்துச் சந்திரனும் சந்திரனுக்கு 4-7-10-ல் மித்திர ராசிகளில் குருவும் சுக்கிரனு மிருந்தாலும ஆயுசு பரியந்தம் மேலான யோகத்தைக் கொடுப்பார்கள்.

தருமாதிபதியும், கருமாதிபதியும் 3-6-8-11-க்கு அதிபர்களுடன் சேராதிருந்தால சுபபலனைத் தருவார்கள்.

பூர்வபட்சத்துச் சந்திரன் மித்திர ராசியிலிருந்து குரு சந்திரனுக்கு கேந்திரத்திலிருந்தால் ஜாதகன் சுகவானு யிருப்பான்.

இலக்கினத்தில் சுபக்கிரகம் இருக்கப்பார்க்க சுகவானுக இருப்பான். இலக்கின முதல் நான்கு கேந்திரங்களில் சுபக்கிரகங்கள் சந்திரனுடனிருந்தால் யோகவானு யிருப்பான். பாபர் சம்பந்தமிலலாமல் சுபக்கிரகங்கள் நட்பு இராசிகளி லிருந்தால் யோகவான. இலக்கினுதிபதி உச்ச சொக்ஷேத்திர மித்துரு இராசிகளிலிருக்க 4-10-க்குடையவர்கள அல்லது 4-11-க் குடையவர்கள் தங்கள் இராசிகளில் மாறி யிருந்தாலும் யோகவான், சுபக்கிரகங்கள் உச்ச ஸ்தானஙகளிலிருந்து ஒருவர்க் கொருவர் பாராதிருந்தால் யோகவான.



குருவும் பூர்வபட்சத்துச் சந்திரனும் கடக இராசியில ஆதிபத்ய தோஷமில்லாமல் கூடியிருந்தால் யோக ஜாதகம், பூர்வபட்சத்துச் சந்திரனுக்கு ஏழாமிடத்தில செவ்வாயிருக்க சுபக்கிரகங்கள் உச்ச சொக்ஷேத்திர மித்துரு ராசிகளிருக்கப் பாபிகள் சேராமலும் பாராமலுமிருக்க யோகஜாதகம்.

இலக்கினத்துக்கு 3-4-6-9-11-க் குடையவர்களும் இலக்கினுதிபதியும் உச்சம் சொக்ஷேத்திரம் கேந்திரம், திரிகோணம் மித்துரு இராசிகளிலிருந்து சுபாள் பார்வை அல்லது சேர்க்கை யுண்டானல யோக ஜாதகம்.

இலக்கினம் மித்துரு இராசியாய் குருவிருக்க பூர்வபட்சத்து சந்திரன் பார்க்க அல்லது சந்திரனுக்கு கேந்திரத்தில் குருவிருக்க யோகஜாதகம். இலக்கினமும் சந்திரலக்கினமும ஒன்ருகி இலக்கினுதிபதி சுபக்கிரகமா யிருந்து லாப ஸ்தானத்திலிருக்க இலக்கினுதிபதிக் கிருபுறமும் சுபக்கிரகங்கள் நட்பு ஆட்சியாயிருக்கில் யோக ஜாதகம்.

திரிகோணுதிபதிகள் திரிகோண ஸ்தானங்களில் சுபர் சகிதமாயிருக்க அல்லது சுபக்கிரகங்கள் பார்க்க திரிகோணுதிபதிக் கிருபுறமும் சுபக்கிரகங்களிருக்க யோகஜாதகம் திரிகோணுதிபதியும் கேந்திராதிபதியும் ஒருவராகில் நிறைந்து ஸ்திரமா யிருக்கப்பட்ட யோக பலனைக் கொடுப்பார். அவர் மற்றொரு திரிகோணுதிபதியுடன் சம்பந்தமுற்ருல் மேலான ராஜயோகத்தைக் கொடுப்பார்.

சுபக்கிரகங்கள் கேந்திர திரிகோண லாபத்திலிருந்தாலும் திரிகோண கேந்திராதிபர்களுடன்

சேர்ந்தாலும் சந்திரனுக்கு கேந்திர திரிகோணத்தி லிருந்தாலும் யோகத்தைத் தருவார் கிரகங்கள். பாபிகள் மாரகாதிபர்களுடன் சேர்ந்தாலும் பார்க்கப்பட்டாலும் கஷ்டபலனைத் தருவார்கள்.

தருமகருமாதிபதிகள் அஷ்டம இலாபாதிபதிகளா யிருந்தாலும் அஷ்டம இலாபாதிபதிகளுடைய சம்பந்தம் வந்தாலும் சுபபலனைத் தாரார்கள், குரு சுக்கிரன் இவ்விருவரும் உபயகேந்திராதிபதிகளானால் பலமான தோஷமுண்டு. இவர்கள உச்சம் சொக்ஷேத்திரம், திரிகோணம் அல்லது மித்துரு இராசியி லிருந்தால் மத்திம பலனையும் 3-6-8-12-ம் இராசிகளிலிருந்தால் அதிக கஷ்ட பலனையுந் தருவார்கள். குருவிருந்த இராசிக்கு 6-8-12-ஆம் இராசிகளில் சந்திரன நின்றால சகடயோகம் அதாவது சிலகாலம் சுகமும் சிலகாலம் கஷ்டமுமாக இருக்கும்.

இலக்கினாதிபதி சுபக்ஷேத்திரங்களிலிருக்க சுபக்கிரகங்கள் சேர அல்லது பார்க்க ஆயுள்விர்த்தியுடன் கீர்த்தியான ஜாதகமாகவும் சுகஜாதகமாகவு மிருக்கும். இலக்கினத்துக்கு 1-2-4-9-11-க் குடையவர்கள் கேந்திரங்களில் சுபர் சகிதமாக இருந்தால் வெகுதனமுள்ள ஜாதகம், இலக்கினத்துக்கு இரண்டாம் இராசிக்கதிபன சுபக்ஷேத்திரங்களில் மித்திரர் சேர்க்கை அல்லது பார்வை புண்டானால், வித்தையுடையவர்களாய் ஆயுள் பரியந்தம் சுகஜீவியாயும் பாக்கியத்தோடு மிருப்பர்.

பாக்கியாதிபதியும் நாலாமிடத்துக் குடையவனும் கேந்திர திரிகோணங்களிலிருக்க சுபக்கிரகங்கள் நேரே பார்க்க வாகனம் பூமி சம்பத்துடையவர்களா யிருப்பார்.



விரயஸ்தானமாகிய பன்னிரண்டில் சுபக்கிரகங்களிருக்க அல்லது பார்க்க சத்கருமங்களில் செலவும் சயன சுகமுமாம். பாபக்கிரகங்கள் இருக்கப்பார்க்க துர்கருமங்களில் செலவு செய்வார்கள்.

## நீசபங்க ராசயோகம்

நீசக்கிரகமிருந்த வீட்டுக்குடையவன் தனக்குரிய உச்சவீட்டி லிருக்கிற, இதற்குடையவன் 6—9—ல் இருக்க, அல்லது சந்திரனுக்காகிலும் அல்லது அந்த நீசனுக்காகிலும் கேந்திரத்திலிருக்க, அதோடு குரு வக்ரமுமேறில் நீசபங்கராஜயோகமாம் அதன் பலன் அரசன் என்க.

## கிரகாதிபருடைய மகாதிசையில் அபகாரம் சித்திரம் க்ஷேமம் பிராணன் இவற்றையறியும் விவரம்

ஒவ்வொரு திசாநாதருடைய மகாதிசை வருஷத்தையும் மகாதிசையின் மொத்தவருஷத் தொகையாகிய 120-க்குக் கொடுத்துக் கண்ட ஈவு அந்தந்தத் திசைக்கும் அபகாரத்துருவமாம்.

ஒரு திசையில் வந்த அபகாரத் துருவத்தை ஒவ்வொருவருடைய மகாதிசை வருஷத்திற்குப் பெருக்கிக் கண்டதொகை அந்தத்திசையில் அவரவருடைய அபகார காலமாம்.

ஒவ்வொருவருடைய அபகாரகாலத்தையும் 120-க்குக் கொடுத்துக் கண்ட ஈவு அவரவர் அபகாரத்துக்கும் சித்திரத்துருவமாம்.

ஒருவருடைய அபகாரத்தில் வந்த சித்திரத் துருவத்தை ஒவ்வொருவருடைய மகாதிசை வருஷத்திற்

பெருக்கிக் கண்ட தொகை, அந்த அபகாரத்தில் அவரவருடைய சித்திர காலமாம்.

ஒவ்வொருவருடைய சித்திர காலத்திறத்தையும் 120-க்குக் கொடுத்துக்கண்ட ஈவு. அவரவருடைய சித்திரத்துக்கும் சூக்ஷமத்துருவமாம் ஒருவருடைய சித்திரத்துக்கு வந்த சூக்ஷமத் துருவத்தை ஒவ்வொருவருடைய மகாதிசை வஷத்திற் பெருக்கிக் கண்ட தொகை அந்தச் சித்திரத்தில் அவரவருடைய சூக்ஷம காலமாம்.

ஒவ்வொருவருடைய சூக்ஷம காலத்தையும் 120-க்குக் கொடுத்துக் கண்ட ஈவு. அவரவருடைய சூக்ஷமத்துக்கும் பிராணத்துருவமாம்.

ஒருவருடைய சூக்ஷமத்துக்குவந்த பிராணத் துருவத்தை ஒவ்வொருவருடைய மகாதிசை வருஷத்திற் பெருக்கிக்கண்ட தொகை, அந்த சூக்ஷமத்தில் அவரவருடைய பிராணகாலமாம்.

சூரியன் இலக்கினத்துக்கு 3-6-10 இந்த ஸ்தானங்களிலும் சந்திரன் இலக்கினத்துக்கு 1-6-7-10-ல் இந்த ஸ்தானங்களிலும் செவ்வாய் இலக்கினத்துக்கு 3-6 இந்த ஸ்தானங்களிலும் குரு இலக்கினத்துக்கு 2-5-7-9 இந்த ஸ்தானங்களிலும் சனி இலக்கினத்துக்கு 3-6 இந்த ஸ்தானங்களிலும் புதன் இலக்கினத்துக்கு 2-8-10-11 இந்த ஸ்தானங்களிலும் கேது இலக்கினத்துக்கு 3-6 இந்த ஸ்தானங்களிலும் சுக்கிரன் இலக்கினத்துக்கு 1-2-3-4-5-8-9-11-12 இந்த ஸ்தானங்களிலு மிருந்தால் அவரவர்கள் திசையில் பொதுவாய்ச் சுபபலன்களுண்டாம்.



சூரியதிசையில் சந்திரன், செவ்வாய், குரு இவர்களுடைய புக்திகளும். சந்திரதிசையில் சூரியன் குரு இவர்களுடைய புக்திகளும் செவ்வாய் திசையில் சூரியன், சந்திரன், குரு, இவர்களுடைய புக்திகளும், இராகு திசையில் செவ்வாய், குரு இவர்களுடைய புக்திகளும் குரு திசையில் சூரியன், சந்திரன், செவ்வாய் இவர்களுடைய புக்திகளும், சனி திசையில் புதன், சுக்கிரன் இவர்களுடைய புக்திகளும், புதன் திசையில் சனி, சுக்கிரன் இவர்களுடைய புக்திகளும், கேதுதிசையில் சுக்கிரன், சனி இவர்களுடைய புக்திகளும். சுக்கிர திசையில் புதன், சனி இவர்களுடைய புக்திகளும் பொதுவாய் நல்ல பலன்களாம.

### சுக்கிரன் சனி பலன்

சுக்கிரன் தன்னுடைய திசையில் சனியினுடைய புக்தியில் தான் கொடுக்கவேண்டிய சுபம் அல்லது அசுப பலன்களை விசேஷமாய்க் கொடுப்பார். சனியும் தன்னுடைய திசையில தான் கொடுக்க வேண்டிய சுபம் அல்லது அசுப பலனை சுக்கிரனுடைய புக்தியில் விசேஷமாய்க் கொடுப்பார்.

### கிரகங்கள் தங்கள் திசைகளில் நற்பலன் கொடுக்கும் காலம்

சூரியனும் செவ்வாயும் முன்பங்கிலும், குருவும் சுக்கிரனும் நடுப்பங்கிலும், சந்திரனும் சனியும் கடைப்பங்கிலும் புதன் ராகு கேது சுய அந்தரத்துக்குமேலும் யோகபலன்களைக் கொடுக்கவேண்டிய காலங்களாம். இவர்கள் சுயபுக்தி ஆரம்பத்தில் விசேஷமான யோகபலன்களைத் தருவார்களாலும்

தங்கள் திசை முழுவதிலும் நல்ல பலன்களைத் தரமாட்டார்களாம்.

சரராசிக்கு 11-மிடத்துக் குடையவர் சுபபலனைக் கொடார். ஸ்திர ராசிக்கு 9-மிடத்துக் குடையவர் சுப பலனைக் கொடார். உபய ராசிக்கு 7-மிடத்துக் குடையவர் சுப பலனைக் கொடார். மேற்படி ஸ்தானாதிபதிகள் சுபக்ஷேத்திரங்களில் சுபர்கள் மித்துரு இவர்களுடைய சம்பந்தம் அல்லது பார்வை பெற்றிருந்தால், சுப பலன்களைக் கொடுப்பார்கள்.

மாரகாதிபர்கள் தங்களுடைய திசைகளில் தங்களுடன் சம்பந்தம் பெற்றிருக்கிற சுபக்கிரகங்களுடைய புக்திகளில் மாரகத்தைக் கொடார்கள். தங்களுடன் சம்பந்தமில்லாதிருக்கிற பாபக் கிரகங்களுடைய புக்திகளிலே மாரகத்தைக் கொடுப்பார்கள்.

அஷ்டமாதிபதியினுடைய திசையில் மாரகாதிபர்களுடைய புக்திகளின் விரையம். பகை, பிணி, கண்டம் முதலிய கொடிய கஷ்டபலனும். அஷ்டமாதிபதி திசையில் பிரபலயோக பலனுண்டானல் தப்பாமல் மாரகத்தைக் கொடுப்பார். இலக்கினாதிபதி அஷ்டமாதிபதி சந்திரன் சனி இவர்கள் சேர்ந்திருந்தாலும், சனியும் இராகுவும் 4-7 இந்த இடங்களில் சேர்ந்திருந்தாலும், சூரியனுக்கு 7-ல் சனியும், சந்திரனுக்கு 7-ல் புதனும், அங்காரகனுக்கு 7-ல் சனியும், புதனுக்கு 7-ல் சந்திரனும், சனிக்கு 4-7-ல் அங்காரகனும் இருந்தால், பொதுவாய்த் தங்கள் திசைமுழுதும் நல்ல பலனைக் கொடார்கள்.

திசாநாதனுக்குப் புக்திநாதன் மித்திரனுகக் கேந்திரம் திரிகோணம் சொக்ஷேத்திரம் உச்சம்



தனலாப ஸ்தாபனங்களி லிருந்தால், அந்தப் புக்தியில் பூமி, தனம், சம்பத்து, புத்திர மித்திர களத்திர சுபசோபனங்க ளுண்டாம் புக்தி நாதன் சுபர்கள் யோககாரகாளாகிய கிரகங்களுடைய சம்பந்தம் அல்லது பார்வை பெற்றிருந்தால் மேற்சொல்லிய சுபபலன்களைத் தருவார். புக்தி நாதன் மாரகர் அல்லது பாபக்கிரகங்களுடன் சேர்ந்தாலும் பார்க்கப்பட்டாலும் அல்லது துதிகை சப்தமாதிபதியாய் 2—3—6—7—8—12-ல் இருந்தாலும் கஷ்டபல னுண்டாகும்.

சுபக்ஷேத்திராதிபதிகள் சுபக்ஷேத்திரங்களில் சுபாள் யோககாரகாளுடைய சம்பந்தம் பார்வை எவ்வளவுக் கதிகமாய்ப் பெற்றிருக்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அந்த சுபக்ஷேத்திரத்துக் குரிய சுபபலன்களை அவர்களுடைய திசாபுத்தி முதலிய காலங்களில் விசேஷமாய்க் கொடுப்பார்கள்.

பாப க்ஷேத்திரங்களில் பாபிகள் மாரகாளுடைய சம்பந்தம் பார்வை எவ்வளவு பெற்றிருக்கிறார்களோ அதற்குத் தக்கபடி சுபபலன்கள் குறைந்து பாபபலனுண்டாம்.

பாபிகள் மித்திர ராசியில் சுபாள் யோக காரகாளுடைய சம்பந்தம் அல்லது பார்வை பெற்றிருந்தால் அதற்குத்தக்க சுபபலன்களையும், மாரகாள் அல்லது பாபிகளுடைய சம்பந்தம் அல்லது பார்வை பெற்றிருந்தால் அதற்குத்தக்க கெட்ட பலன்களும் தருவார்கள்.

இலக்கினத்துக்கு 10-க்குடையவர் திசையில் 9-க்குடையவர் புக்தியிலும் 9-க்குடையவர் திசை

யில் 10-க்குடையவர் புக்தியிலும் ஒருவருக்கு ஒருவர் மேலான யோகத்தைத் தருவார்கள்.

பாபிகள் மாரகாள் இவர்களுடன் சம்பக்கப் படாமல் கேந்திரம் திரிகோணம் முதலிய சுபக்ஷேத்திரத்தி லிருக்கின்ற இராகு கேதுக்கள் தங்களுடைய திசாபுத்தி காலங்களில் மேலான யோகத்தைத் தருவார்கள்.

திசாபுக்தி காலங்களில் கோச்சாரத்தையும் அனுசரித்துப் பலன்கள் தெரிந்துகொள்ள வேண்டியது கோசார ரீதியாய் குரு, சனி நல்ல ஸ்தானங்களிலிருந்தால் திசாபுத்துக்குரிய நல்ல பலன்கள் பிரபலமா யிருக்கும். கோசார ரீதியாய் அவர்கள் கெட்ட ஸ்தானங்களிலிருந்தால் திசாபுக்தி காலத்தில் அதற்குரிய நல்ல பலன்கள் மத்திம பலனுரும்.

---

## அஷ்ட வர்க்கம்

### சூரியன் பரல் 48-க்கு விபரம்

ரவி 1-2-4-7-8-9-10-11, ஆக 8. மதி 3-6-10-11, ஆக 4. அங் 1-2-4-8-9-10-11, ஆக 7. புதன் 3-5-6 9-10-11-12, ஆக 7. குரு 5-6-9-11. ஆக 4. புகர் 6-7-12, ஆக 3 சனி 1-2-4-7-8-9-10-11, ஆக 8. லக்கினம் 3-4-6-10-11-12, ஆக 6.

### சந்திரன் பரல் 49-க்கு விபரம்

ரவி 3-6-7-9-10-11, ஆக 6. மதி 1-3-6-7-10-11, ஆக 6 அங் 2-3-5-6-9-10-11, ஆக 7. புதன் 1-3-4-5-7-8-10-11, ஆக 8. குரு 1-2-4-7-8-10-11, ஆக 7. புகர் 3-4-5-7-9-10-11, ஆக 7. சனி 3-5-6-11, ஆக 4. லக்கினம் 3-6-10-11, ஆக 4.



### செவ்வாய் பரல் 39-க்கு விபரம்

ரவி 1-5-6-10-11, ஆக 5 மதி 3-6-11, ஆக 3. அங் 1-2-4-7-8-10-11, ஆக 7. புதன் 3-5-6-11, ஆக 4. குரு 6-10-11-12, ஆக 4. புகர் 6-8-11-12, ஆக 4. சனி 1-4-7-8-9-10-11, ஆக 7. லக்கினம் 3-6-10-11, ஆக 4.

### புதன் பரல் 54-க்கு விபரம்

ரவி 5-6-9-11-12, ஆக 5. மதி 2-4-6-8-10-11, ஆக 6. அங் 1-2-4-7-8-9-10-11, ஆக 8. புதன் 1-3-5-6-9-10-11-12, ஆக 8. குரு 6-8-11-12, ஆக 4. புகர் 1-2-3-4-5-8-9-11, ஆக 8. சனி 1-2-4-7-8-9-10-11, ஆக 8. லக்கினம் 1-2-4-6-8-10-11, ஆக 7.

### குரு பரல் 56-க்கு விபரம்

ரவி 1-2-3-4-7-8-9-10-11, ஆக 9. மதி 2-5-7-9-11, ஆக 5. அங் 1-2-4-7-8-10-11, ஆக 7. புதன் 1-2-3-4-5-6-9-10-11, ஆக 9. குரு 1-3-4-7-8-10-11, ஆக 7. புகர் 2-5-6-9-10-11, ஆக 6. சனி 3-5-6-12, ஆக 4. லக்கினம் 1-3-4-5-6-7-9-10-11, ஆக 9.

### சுக்கிரன் பரல் 52-க்கு விபரம்

ரவி 8-11-12, ஆக 3. மதி 1-2-3-4-5-8-9-11-12, ஆக 9. அங் 3-4-6-9-11-12, ஆக 6. புதன் 3-5-6-9-11, ஆக 5. குரு 5-8-9-10-11, ஆக 5. புகர் 1-2-3-4-5-8-9-10-11, ஆக 9. சனி 3-4-5-8-9-10-11, ஆக 7. லக்கினம் 1-2-3-4-5-8-9-11, ஆக 8,

### சனி பரல் 39-க்கு விபரம்

ரவி 1-2-4-7-8-10-11, ஆக 7 மதி 3-6-11, ஆக 3. அங் 3-5-6-10-11-12, ஆக 6. புதன் 6-8-9-10-11-12,

ஆக 6. குரு 5-6-11-12, ஆக 4 புகர் 6-11-12, ஆக 3. சனி 3-5-6-11, ஆக 4. லக்கினம் 1-3-4-6-9 10-11, ஆக 6. புகர்—சுக்கிரன்.

### பிந்து கணக்கு விபரம்

ஒரு பிந்து இருந்தால் பயம் சஞ்சாரம் இரண்டு பிந்துக்கள் இருந்தால் மனஸ்தாபம் சோரபயம். வியாஜ்ய நஷ்டம் மூன்று பிந்துக்களுக்கு அன்னிய தேசவாசம் தூர்பலம் சிந்தை வியாகூலம் நான்கு பிந்துக்களுக்கு சுகம், தனலாபம் ஐந்து பிந்துக்களுக்கு வஸ்திர அலங்காரம் பெருமை சந்தான தோஷம், வித்யா லாபம். ஆறு பிந்துக்கள் இருந்தால் அலங்காரம், ஆசாரம், வியாஜ்ஜிய சித்தி, வாகன லாபம். கீர்த்தி ஏழு பிந்துக்கள் இருந்தால் நல்ல வாகனங்கள். ராஜாங்க சன்மானம். பெருமை. எட்டு பிந்துக்கள் இருந்தால் நற்குணம். சர்வ ஜீவ வாஞ்சை. புகழ் முதலாகிய பலன்கள் உண்டாகும். இந்தப் பலன்கள் நவக்கிரகங்களுடைய மகா தசா புத்தி யந்திரங்கள் கோசாரங்களில் அந்தந்தக் கிரகங்கள் மேற்சொல்லிய பிந்துகணக்கின் பலத்தை கொடுப்பார்கள்.

### சர்வ அஷ்டபிந்து

சர்வ அஷ்டவர்க்கத்தில் (14) பதினான்கு பிந்துக்கள் இருந்தால பலஹானி. பதினைந்து பிந்துக்களுக்கு வறுமை. பதினாறு பிந்து இருந்தால அவயவங்களில் பீடை, வியாதி, பதினேழு பிந்து இருந்தால் துக்கம் பதினெட்டு பிந்து இருந்தால் ஐஸ்வரிய நஷ்டம். பத்தொன்பது பிந்துவுக்குப் பந்துக்களால் நஷ்டம், மனோ நஷ்டம். இருபது பிந்துக்களுக்கு வியாஜ்யம். அவமானம், பொருள் செலவு இருபத்தி ஒன்று பிந்துக்கள் இருந்தால் சுகக்குறைவு, பிரயத்தின நாசம். இருபத்தி இரண்டு பிந்துக்கள் இருந்தால் கண்டம், மனக்குறைவு. அதைரியம் இருபத்து மூன்றுக்குப் பொருள் செலவு, தைரியக் குறைவு, இருபத்து நான்கு இருந்தால் பொருள் நஷ்டம். இருபத்தைந்து இருந்தால் நாற்கால் ஜீவன் வாகனங்கள் பயிர் பொருள் இவைகளுக்கு நஷ்டம். இருபத்தாறு இருந்தால் மனோகிலேசம்: ஐஸ்வரிய நஷ்டம். இருபத்தேழு பிந்துக்கள் இருந்தால். சர்வ சம்பத்தும். இருபத்தெட்டு இருந்தால் ஐஸ்வரிய லாபம். இருபத்தொன்பது இருந்தால் நல்லோரெனப் புகழப்படுவது, முப்பதிருந்தால் சவுக்கியம், மங்களகரம், முப்பத்தொன்று இருந்தால் சர்வசுகபோகங்கள், சர்வ மங்களகரங்கள. முப்பத்திரண்டு இருந்தால் சர்வ பூஜ்யதை. ஐஸ்வரியலாபம், சுகஜீவனம் முப்பத்தி மூன்று இருந்தால் அதிக சம்பத்து, ஐஸ்வரிய லாபம். முப்பத்தி நான்கு இருந்தால் எல்லோராலும் புகழப்படுவது. சகல சவுக்கியானுகூலம். முப்பத்தைந்து இருந்தால் விசேஷ புத்தி யுள்ளோர்களெனப் புகழ்ச்சி. முப்பத்தாறு இருந்தால் ராஜ்ய லாபம் முதலியவைகள் ஏற்படும். முப்பத்தாறு பிந்துக்களுக்கு மேற்பட்டிருந்தால் ராஜ்ய ஐஸ்வரியங்கள் விசேஷமாய் ஏற்படும், அஷ்டவர்க்கத்தில் பிந்துக்கள் இல்லாவிடத்திலும், சத்துரு நீச வீடுகளில் இருக்கும். கிரகங்களின் மகாதிசா புக்தி அந்தர காலங்களில் பொருள் செலவு, மனோ கஷ்டம், வியாதி முதலியவைகளை கொடுப்பார்கள்.

### சூரிய அஷ்டவர்க்க பலன்

ரவி முதலிய நவக்கிரகங்களுடைய அஷ்ட வர்க்கங்களில் சனி சூர்யகிரகத்தை (பிந்து இல்லாத வீட்டில்) அடைந்தால் அதிக சங்கடம். ரவி லக்கினத்திலிருந்தாலும் சத்துரு ஸ்தானம் நீசராசி இவைகளிலிருந்தாலும் மூன்று இரண்டு பிந்துக்களுடைய வீட்டிலிருந்தாலும் வியாதி பீடை, ரவி, ஐந்து முதலாகிய பிந்துக்களோடு சேர்ந்து ஜன்ம லக்கினத்திலிருந்தாலும், சுவச்ச சுவக்ஷேத்திரங்களிலிருந்தாலும் குறைவற்ற அயிஸ்வரியம் பூரண ஆயுள்.

கேந்திரங்களாகிய ஒன்று, நான்கு ஏழு பத்து திரிகோணங்களாகிய ஐந்து ஒன்பது இவை ஆறு ஐந்து ஏழு பிந்துக்களிலிருந்து அதில் ரவியிருந்தால் முப்பது வருஷத்திற்குள் தகப்பனுக்கு மரணமுண்டாகும். பிந்து சோதனையில் இரண்டு பிந்துக்களோடு புதன், சனி கேந்திரங்களிலிருந்தால் தகப்பனுக்கு விசேஷ அயிஸ்வரிய முண்டாகும். ரவி அஷ்டவர்க்கத்தில், சந்திரா அஷ்டவர்க்கத்தில் அவர்களுடைய ஸ்தானங்கள் பிந்து சூனியங்களாய் இருந்தால் அவர்களுடைய மாசங்கள ராசிகள் அந்த ஜாதகத்திற்கு சுபகர்மங்களுக்கு ஆகாது. சந்திரன் ஒன்று, ஏழு, இரண்டு பிந்துக்களோடு சேர்ந்தாவது இரண்டு, மூன்று கிரகங்களோடு சேர்ந்தாவது ஜன்ம லக்கினத்தில் இருந்தால் ஏழு வருஷத்துக்கு மேல் ஜீவதிசையிராது.

### சந்திர அஷ்டவர்க்க பலன்

கேந்திரத்திலாவது திரிகோணத்திலாவது சந்திரனிருந்து நீச கிரகங்கள் சத்துரு கிரகங்கள்



சேர்ந்திருந்தாலும், நீச க்ஷேத்திரம் சத்துரு க்ஷேத்திரங்களிலிருந்தாலும், களைகள் க்ஷீணத்தாலும், இரண்டு மூன்று பிந்துக்களோடு கூடியிருந்தாலும் அந்த பாவம் பலன் தராது. நான்கு, ஏழு பிந்துக்களோடு கூடின திரிகோணங்களிலாவது, கேந்திரங்களிலாவது, லாப ஸ்தானங்களிலாவது, சந்திரன் பலிஷ்டனாக இருந்தால் அந்தப் பாவம் பலனும் விருத்தியும் உண்டாகும் எட்டு பிந்துக்களோடு கேந்திரங்களில் சந்திரனிருந்தால் கல்வி, பூரணாயுள், அயிஸ்வர்யம், கீர்த்தி உண்டாகும் உச்சஸ்தானம் ஸ்வட்சேத்திரம் நான்கு ஒன்று பத்து ராசிகளில் எட்டு பிந்துக்களோடு சந்திரனிருந்தால் பூரண தனமுண்டாகும், தனுசு, மேஷம், சிங்கம், மகரம் லக்கினங்களில் நான்கு பிந்துக்களோடு கூடி அங்காரகன் இருந்தால் விசேஷ ராஜ்ய லாப முண்டாகும்.

### அங்காரக அஷ்டவர்க்க பலன்

பத்தாம் ராசி, ஜென்மராசியில் எட்டு பிந்துக்களோடு கூடி அங்காரகன் இருந்தால்: விசேஷ பூமிலாப முண்டாகும் உச்ச[illegible]க்ஷேத்திரத்திலாவது எட்டு பிந்துக்களோடு கூடி [illegible]கன் இருந்தால் விசேஷ ராஜ்ய லாப முண்டாகும்.

### புத அஷ்டவர்க்க பலன்

கேந்திர திரிகோணங்களில் எட்டு பிந்துக்களோடு புதனிருந்தால் வித்தியா லாபமுண்டு, ஸ்வக்ஷேத்திரங்களில் ஒன்று, இரண்டு மூன்று பிந்துக்களோடாவது அதிக பிந்துக்களோடாவது சேர்ந்திருந்தால் அந்த பாவம் விருத்தி அடைந்த போதிலும் குறைவு அடைய புதன் அஷ்டவர்க்கத்தில் எந்த

ராசி பிந்துக்கள் அதிகமாக இருக்கிறதோ அந்தராசியில் வித்தியாரம்பம் செய்தால் சகல வித்தைகள் நன்ருய் வரும். புதன் அஷ்டவர்க்கத்தில் பிந்து இல்லாத ராசியில் கோசார ரீதியாக சனிவருங்காலத்தில் பந்துக்கள், அயிஸ்வரியம், பங்காளிகள் இவர்களுக்கு க்ஷீணம் ஏற்படும்.

### குரு அஷ்டவர்க்க பலன்

குரு அஷ்டவர்க்கத்தில் அல்ப பிந்துக்களோடு கூடிய வீட்டில் குரு இருந்தால் அன்னியரால் எவ்வளவு ஒத்தாசை செய்து விருத்திக்குக் கொண்டு வந்த போதிலும் ஆனவிர்த்தி க்ஷீணமாய்விடும். ஐந்து முதலிய எண்ணுள்ள பிந்துக்களோடு கூடி ஆறு, பனனிரண்டு, எட்டு இவைகளில் குரு இருந்தால், பூரண ஆயுள், சர்வகாரியங்களில் ஜெயம், ஐஸ்வரிய முண்டு குரு அஷ்டவர்க்கத்தில் அதிக பிந்துக்களுடைய ராசியில் லக்கினமாகப் பார்த்து நிஷேக முகூர்த்தம் செய்தால் உத்தம சந்தானங்களுண்டு. மேற்சொல்லிய அதிக பிந்துக்களுடைய ராசிக்கு நான்காவது ராசியில் கிரகமிருந்தால் நாற்கால் ஜீவ விருத்தி. தானிய[illegible]ரியம் விருத்தியாகும். நீச ஸ்தானம் சத்துரு ஸ்தானம் மூடராசி இவைகளை விட்டுத் தனது உச்ச க்ஷேத்திரம், சுப க்ஷேத்திரம் கேந்திரம் தனது அம்சம் இவைகள எட்டு பிந்துக்களோடு கூடி குரு இருந்தால் ராஜ்ய அதிகார முண்டாகும். மேற்சொல்லிய லட்சணங்களோடு குரு சேர்ந்து ஏழு பிந்துக்களோடு இருந்தால் அதிக சம்போக சுகம். விசேஷம் ஐஸ்வரியம் நல்ல சந்தானமும், குரு ஆறு பிந்துக்களோடு கூடியிருந்தால் வாகனறி ஐஸ்வரியங்களும் ஐந்து பிந்துக்களோடு இருந்தால் சுகுணமும், விவகார ஜயமும் நற்குணங்களும் உண்டாகும்.



### சுக்கிர அஷ்டவர்க்க பலன்

கேந்திர திரிகோணங்களில் எட்டு பிந்துக்களோடு சுக்கிரனிருந்தால் பொருள், ஆயுள், உத்தம குணம், வாகனறி சுகங்கள், சம்போகங்கள், ஐஸ்வரியம் நவரத்தின லாபம் உண்டாகும். சுக்கிரன் நீசம் அஸ்தமனம் ஆறு எட்டு இவைகளி லிருந்தால் மேற்சொல்லியயோகங்கள் கெட்டுப்போகும். ஏழு பிந்துக்களுடைய ராசியில் திக் பாகத்தில் சுக்கிரனிருந்தால் விசேஷ சம்போக சுகமேற்படும்.

### சனி அஷ்டவர்க்க பலன்

சனி அஷ்டவர்க்கத்தில் திரிகோணபிந்து சூனியமாக இருந்து அதில் சனி யிருந்தால் பொருள் செலவு. கண்டம் இவை ஏற்படும் ஒன்று, இரண்டு, ஏழு பிந்துக்களோடு கூடிய கேந்திர ராசியிலாவது தனது உச்சராசியிலாவது சனி யிருந்தால் அற்ப ஆயுசு. ஆறு ஐந்து பிந்துக்களோடு சேர்ந்த லக்கினத்தில் சனி பலிஷ்டனுக[illegible] பிறந்தநாள் முதல் துக்கமுண்டா யி[illegible]சர ராசியில் அதிசலிஷ்டர்களான சத்[illegible] நீச கிரகங்களோடு கூடியிருந்தால் பந்துஜன க்ஷீணம். சுப கிரகங்களோடு கூடிய க்ஷேத்திரத்தில் சனி யிருந்தால் பூரண ஆயுள் உண்டாகும். சனி மூடக்கிரமம், அதிக நீச கிரகங்களோடு சேர்ந்து நாலு, ஐந்து கிரகங்களோடு சேர்ந்திருந்தால் கேவல விருத்தியினுல் ஜீவனம். எட்டு பிந்துக்களோடு சேர்ந்து ஜனம லக்கினத்திலிருந்தால் தனலாபமும் புத்தியில் பலம் சத்துரு ஜயமு முண்டு. ஏழு பிந்துக்களோடு கூடிய ராசியி லிருந்தால் பூமி லாபமுண்டு.

# மாயாஜால மர்மங்கள்

[நான்குபாகங்கள் அடங்கியது]

## விலை ரூ. 3-00

இந்நூலில் வேண்டிய அதர்வண வித்தைகளும், மோடி வித்தைகளின் இரகசியங்களும், மற்றும் யாவரும் பிரமிக்கத் தக்க பல ஜாலங்கள், பல சித்துகள் விளையாடும் மை வகைகளும், அஞ்சன மைகளும், சிங்கிவித்தை, சொக்குப்பொடியின் சூக்ஷி, அஷ்டகர்ம கரு மை, மற்றும் முனிவர்கள், வராகி, ஜாலக்காள், குட்டிச்சாத்தான், யக்ஷணி, அநுமான், மாடன், பகவதி, இருளிகாட்டேரி வசியங்களும், அதற்கு வேண்டிய மந்திரங்களும் மற்றும் கோகர்ன கஜகர்ன இந்திர மகேந்திர ஜாலங்களும், குழந்தைகளின் சகல தோஷங்களுக்கும் விபூதிபிடித்தல், வேப்பிலையடித்தல், பேய்பிசாசுகளை ஓட்டுதல், பில்லி சூனியங்களை அகற்றல், சதிபதிகள் பிரியா திருத்தல், ஈடுமருந்தை முறித்தல், மற்றும் பாம்பு, தேள், நாய், பூனை, எலி இதுபோன்ற பல விஷஜெந்துக்களின் கடி விஷங்களை யொழித்தல், இன்னும் ஜாலக்காளின் ஜெகஜால வித்தைகள், முள்ளின்மீது படுத்தல், நெருப்பை கையிலள்ளுதல், நெருப்பு மிதித்தல், நெருப்புசட்டி ஏந்தும் சூக்ஷம், நெருப்பை மடியில் கட்டுதல், ஜலத்தின்மீது படுத்தல், ஜலத்திலுட்காருதல், வயிற்றில் ஈட்டிபாய்ச்சுதல், மோடியின் மும்முரமான வித்தை[illegible]விலங்குகளை அடக்கி ஆளுதல், உடுக்கையை உ[illegible]குட்டியின்தலை கத்துதல், உண்ணாவிரதமிருத்தல், ஆட்டுமத்தையை மாட்டுமந்தையாக்குதல், அந்தரமாக நிற்குதல், குளத்தினுள் சென்று லிகிதம் எழுதுதல், பந்தயம் கெலித்தல், பாணுகொம்பு பாட்டுபாடுதல், இதுபோன்ற எண்ணிலடங்காத ஏராளமான ஜால வித்தைகள் இதில் அடங்கியுள்ளது.

எமது விலாசம்:—

ஆர். ஜி. பதி. கம்பெனி,
4, வெங்கட்ராமய்யர் தெரு,
சென்னை-1.

ஓ

வி

இதில் ஸ்திரீ
அவர்களது மர்ம
அவைகளின் நேர்
ரதி மன்மத சிங்க
சுகம், குடும்ப ரகசி
மங்கள், காதலர் கா
கள், ஆரோக்கிய ச
திரம், சிசு சம்ரக்ஷ
ஸ்திரீ புருஷர்க
களும், அதைப்
மகாரிஷிகள்
இல்லறஇன்பங்க
இனிமேல் விவா
சிறுமியர்களுக்
நூலின் சுவைய
செய்து முற்றி
மனத் துணியா
பாயமும் குடு
புகட்டும்.

எமது விலா